மல்கியா 4:2

யோவான் 17:17

நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 117* நவம்பர் *2025*

## யாக்கோபின் பிள்ளைகள் மற்றும் செழிப்பு - அடையாளம் மற்றும் நிஜ நிறைவேறுதல்

***ஆதி. 29:31-30:43***

***PT# 459, May-June 1962, pp. 38-42***

*1.* **வே**தாகமத்தின் இந்தப் பகுதியில் நாம் பின்வரும் விவரங்களைக் காண்கிறோம்: (1) யாக்கோபின் பன்னிரண்டு பிள்ளைகளின் பிறப்பு, (2) யாக்கோபு இன்னும் ஏழு வருடங்களுக்கு லாபானிடத்தில் சேவிப்பது, (3) ஆரானில் யாக்கோபுக்கிருந்த செழிப்பு.

*2.* ஆதி. 29:31 லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்; ராகேலோ மலடியாயிருந்தாள். சுவிசேஷ யுகத்தின் ஆரம்ப காலத்தில் தேவன் பின்வரும் காரியங்களைக் கண்டார். அதிகமாகவோ, குறைவாகவோ தப்பறைகள் கலந்த சில சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும், அதாவது நிஜ நிறைவேறுதலான லேயாள், அவைகளிலுள்ள தப்பறைகளின் நிமித்தம் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களாகிய (விசேஷமாக நட்சத்திர அங்கத்தினர்கள் மற்றும் அவர்களுடைய விசேஷித்த உதவியாளர்கள் ) நிஜ நிறைவேறுதலான யாக்கோபினால் நிஜ நிறைவேறுதலான ராகேலைக் காட்டிலும் மிக குறைவாக மதித்துணரப்பட்டு விரும்பப்பட்டார்கள் (லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு). இருந்தாலும் அக்காலத்தில் சபையில் ஒரு வீழ்ச்சி உண்டாகுமென்று தேவன் அறிந்திருந்தார் (2தெச. 2:3). ஆகையால் அவருடைய திட்டத்தில் சில காரியங்களை அனுமதிப்பது என்ற இயல்புக்கு இணக்கமாகச், சுவிசேஷ யுகத்தின் இந்த இடைப்பட்ட காலத்தில் அதிகமாகவோ, குறைவாகவோ தப்பறைகள் கலந்த இந்த சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் (லேயாள்) சில மதப்பிரிவு இயக்கங்களை உருவாக்குவதற்கு வழி திறக்கப்படுவதைத் தேவன் அனுமதித்தார் (அவள் கர்ப்பந் தரிக்கும்படி செய்தார்). ஆனால் அந்த இடைப்பட்ட காலத்தில் ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களுமாகிய நிஜ நிறைவேறுதலான ராகேல், தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் கனிதரும் ஒரு ஊழியத்தை உண்டு பண்ணுவதில் பலன் கொடுக்காத நிலையிலிருந்தார்கள் (ராகேலோ மலடியாயிருந்தாள்).



**ரூபன், சிமியோன், லேவி, யூதா**

*3.* ஆதி. 29:32 லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார்; இப்பொழுது என் புருஷன் என்னை நேசிப்பார் என்று சொல்லி, அவனுக்கு ரூபன் என்று பேரிட்டாள். சிமிர்னா சபை கால கட்டத்தில் நிஜ நிறைவேறுதலான யாக்கோபு அந்த சபையின் பிரதான நட்சத்திர அங்கத்தினராகிய யோவான் அப்போஸ்தலரின் மூலம் செயல்பட்டார் [அந்தியோகியா ஊரைச் சேர்ந்த இக்னேஷியஸ் (Ignatius of Antioch) மற்றும் பாலிகார்ப் (Polycarp)

## தூது நிரல்

1. யாக்கோபின் பிள்ளைகள் மற்றும் செழிப்பு.............1
2. வேதாகமத்தை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்..........................................................11
3. அக்கினித்தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய்..........................................................19

என்பவர்கள் அவருக்கு உதவி செய்தார்கள்). கிறிஸ்து மாம்சமாவதற்கு முன்பிருந்த நிலையிலும், அவர் மாம்சத்திலிருந்த நாட்களிலும், அதற்குப் பிறகு அவருக்கிருந்த நிலையிலும், தேவனுடைய விசேஷித்த பிரதிநிதியாக அவருக்கிருந்த அலுவலைப் பற்றிய போதனை யோவான் அப்போஸ்தலரின் உக்கிராணத்துவ கோட்பாடாக இருந்தது. அந்த கோட்பாட்டைக் கொண்டு அவர் ஒரு சிறுமந்தை இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். ஆனால் அது சம்பந்தப்பட்ட தப்பறைகள் கலந்த சத்தியங்களும் (எடுத்துக்காட்டாக மனித உருவிலுள்ள தேவன், திரித்துவம் போன்ற தப்பறைகளோடு கலந்த சத்தியங்கள்) அவைகளைப் பிரயோகிப்பவர்களும் [லேயாள் - குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக ஆரிஜன் (Oriஆதி.) மற்றும் அதனாசியஸ் (Athanasius) என்பவர்கள்] அந்த உக்கிராணத்துவ கோட்பாட்டைக் கொண்டு கிரேக்க கத்தோலிக்க சபை (Greek Catholic Church) என்னும் மத பிரிவை உண்டாக்கினார்கள் [லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று … ரூபன் (இதோ ஒரு குமாரன்); E Vol. 8, pp. 226-236, 700, 701]. இவ்வாறு அவைகளைப் பிரயோகித்தவர்கள் அந்த மதப்பிரிவை கண்டு பெரிதும் மகிழ்ந்து, அவர்களுடைய சோதனைகளில் தேவன் அவர்களை நோக்கி பார்த்தாரென்று மிகுந்த தைரிய உறுதியை வெளிப்படுத்தினார்கள் (கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார்). மேலும் இந்த உருவகமான குமாரனைக் கொடுப்பதின் மூலம் தேவன் அவர்களை விசேஷமாக ஆசீர்வதித்தார் என்று கூறினார்கள். அதின் விளைவாகத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் அவர்களை இப்பொழுது நிச்சயமாக அதிகமாக மதித்துணர்ந்து நேசிப்பார்களென்று எண்ணினார்கள் (என் புருஷன் என்னை நேசிப்பார்).

4. ஆதி. 29:33 மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்குச் சிமியோன் என்று பேரிட்டாள். அடுத்ததாக நிஜ நிறைவேறுதலான யாக்கோபு இரேனியஸ் (Irenaeus) என்பவரின் மூலம் கிரியை செய்தார் (அவருடைய விசேஷித்த உதவியாளராகிய டர்டுலியன் – Tertullian- அவருக்கு உதவி செய்தார்). சத்தியத்தின் காப்பாளரும் நிர்வாகியுமான ஒரே ஒரு "தேவனுடைய சபை" இருக்கிறது என்ற உக்கிராணத்துவ சத்தியத்தை அவர் கொடுத்து, அடுத்த சிறுமந்தை இயக்கத்தைத் தொடங்கினார். அது சம்பந்தப்பட்ட தப்பறைகள் கலந்த சத்தியங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்கள் (லேயாள் - குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக சிப்ரியன் –Cyprian - மற்றும் அகஸ்டின் - Augustine) அந்த உக்கிராணத்துவ கோட்பாட்டைக் கொண்டு ரோமன் கத்தோலிக்க சபை (Roman Catholic Church) என்னும் மதப்பிரிவை உண்டாக்கினார்கள் (ஒரு குமாரனைப் பெற்று; E Vol. 8, pp. 236-254, 439, 701-703). நிஜ நிறைவேறுதலான யாக்கோபு நிஜ நிறைவேறுதலான ராகேலைக் காட்டிலும் அவர்களைக் குறைவாக நேசித்தாரென்ற உண்மையைத் தேவன் கவனித்தாரென்று மிகுந்த தைரிய உறுதியுடன் அந்த சத்தியங்களை இவ்வாறு பிரயோகித்தவர்கள் சொன்னார்கள் (நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி). ஆகையால் தேவன் அவர்களுக்கு இந்த உருவகமான குமாரனையும் கொடுத்தார் (இவனையும் எனக்குத் தந்தார்) இவ்வாறு மற்றொரு மதப்பிரிவு இயக்கம் அபிவிருத்தியடைவதை அவர்கள் அவர்களுடைய ஜெபத்தின் பதிலாகக் கருதினார்கள் [சிமியோன் (செவி சாய்க்கிற, கவனிக்கிற)].

5. ஆதி. 29:34 பின்னும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: என் புருஷனுக்கு மூன்று குமாரரைப் பெற்றபடியால் அவர் இப்பொழுது என்னோடே சேர்ந்திருப்பார் என்று சொல்லி, அவனுக்கு லேவி என்று பேரிட்டாள். இதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு நிஜ நிறைவேறுதலான யாக்கோபு, லூத்தர் (Luther) மூலம் செயல்பட்டார் (அவருடைய விசேஷித்த உதவியாளராகிய மெலான்க்தான் – Melanchthon- அவருக்கு உதவினார்). கிறிஸ்துவின் பலிபுண்ணியத்தில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் மட்டுமே தேவனுடைய கிருபையினால் நியாயமாகுதல் உண்டாகுகிறது என்ற உக்கிராணத்துவ கோட்பாட்டைக் கொடுத்து ஒரு சிறுமந்தை இயக்கத்தைத் தொடங்கினார். அது சம்பந்தப்பட்ட தப்பறைகள் கலந்த சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் (லேயாள் - குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக யோவான் – John The Steadfast- என்பவர் அந்த கோட்பாட்டைக் கொண்டு லூத்தரன் சபை (Lutheran Church) என்ற மதப்பிரிவை உண்டாக்கினார்கள் (ஒரு குமாரனைப் பெற்று; E Vol. 8, pp. 297-322, 440, 714-716). அவர்கள் இந்த கூடுதலான மதப்பிரிவு இயக்கத்தை அபிவிருத்தி செய்ததால், இப்போது தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் நிச்சயமாக அவர்களோடு முழுமையாக இணைந்திருப்பார்கள் என்று கூறினார்கள் (அவர் இப்போது என்னோடே சேர்ந்திருப்பார்). ஆகையால் அவ்வித விளைவுகளைக் கொண்டு வரும் ஒரு மதப்பிரிவாக அதைக் கருதினார்கள் [லேவி - சேருவது, இணைவது)].

6. ஆதி. 29:35 மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன் என்று சொல்லி, அவனுக்கு யூதா என்று பேரிட்டாள்; பிற்பாடு அவளுக்குப் பிள்ளைப்பேறு நின்று போயிற்று. மேலும் நிஜ நிறைவேறுதலான யாக்கோபு, ஸ்விங்ளியின் (Zwingli) மூலம் செயல்பட்டார் (அவருடைய விசேஷித்த உதவியாளராகிய இகோலாம்பெடியஸ் – Oecolampadius -அவருக்கு உதவி செய்தார்). கர்த்தருடைய இராப்போஜனமென்பது கர்த்தராகிய யெஷூஆவின் பலி புண்ணியத்தை விசுவாசத்தினால் தனதாக்கிக்கொள்ளுவதையும், பரிசுத்தவான்களுக்கிடையிலுள்ள ஒருமைப்பாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அடையாளமாகுமென்ற உக்கிராணத்துவ கோட்பாட்டைக் கொடுத்து, மற்றொரு சிறுமந்தை இயக்கத்தைத் தொடங்கினார். அது சம்பந்தப்பட்ட தப்பறைகள் கலந்த சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் (லேயாள் - குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக கால்வின் - Calvin) அந்த கோட்பாட்டைக் கொண்டு கால்வினிஸ்டிக் சபை (Calvinistic Church) என்ற மதப்பிரிவை உருவாக்கினார். இதே மதப்பிரிவு ரிஃபார்ம்டு சபை (Reformed Church) என்றும் அல்லது பிரிஸ்பிடேரியன் சபை (Presbyterian Church) என்றும் அழைக்கப்படுகிறது (ஒரு குமாரனைப் பெற்று; E Vol. 8, pp. 190-199, 439, 692). இது சம்பந்தமாக அவர்கள் தேவனைத் துதிக்க வேண்டுமென்ற தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க தூண்டப்பட்டிருந்தார்கள். ஏனென்றால் இந்த மதப்பிரிவு தேவனுக்கு விசேஷித்த துதியை கொண்டு வருமென்று அவர்கள் எண்ணினார்கள் [யூதா (துதி)]. தப்பறை கலந்த இந்த சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் [லேயாள்] அதற்குப்பிறகு கொஞ்சம் காலத்திற்கு எவ்வித கூடுதலான சிறுமந்தை இயக்கங்களையும் மதப்பிரிவுகளாக ஆக்குவதை நிறுத்தி

விட்டார்கள் (அவளுக்குப் பிள்ளை பேறு நின்று போயிற்று). நிஜ நிறைவேறுதலான லேயாளினால் உரு வாக்கப்பட்ட இந்த நான்கு மதப்பிரிவுகளெல் - லாம் (கிரேக்க கத்தோலிக்க, ரோம கத்தோலிக்க, லூத்தரன் மற்றும் கால்வினிஸ்டிக் சபை) ஐரோப்பா கண்டத்திலுள்ள அரசாங்கமும் சபையும் சேர்ந்த அமைப்புகளாக இருந்தனவென்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

*7. ஆதி. 30:1* ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளைகளைப் பெறாததைக்கண்டு, தன் சகோதரியின் மேல் பொறாமைகொண்டு, யாக்கோபை நோக்கி: எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள். மறுமலர்ச்சியின் காலம் வந்தபோது, ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகிப்பவர்கள் பின்வரும் காரியத்தை உணர தொடங்கினார்கள். அவர்கள் பல வருடங்களாக ஆவலாய் விரும்பி, ஊக்கத்துடன் முயற்சி செய்திருந்தாலும், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்குத், தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் எவ்வித கனிதரும் இயக்கங்களையும் உண்டு பண்ணவில்லை (ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளைகளைப் பெறாததைக் கண்டு). ஆனால் நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பாரோ பல மதப்பிரிவு இயக்கங்களை உண்டு பண்ணி இருந்தார்கள். ஆகையால் நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பார் நிஜ நிறைவேறுதலான லேயாளைப் போல் கனிதரும் இயக்கங்களை உண்டு பண்ண ஆவலாய் இருந்தார்கள் (தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு). அவர்களுடைய இந்த தீவிரமான விருப்பத்தினால், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் தங்களுக்குக் கனிதரும் இயக்கங்களைக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள் (எனக்குப் பிள்ளை கொடு). மேலும் அவர்கள் விரைவில் அவ்வித இயக்கங்களை அபிவிருத்தி செய்யாவிட்டால் எவ்வித கனிகளையும் கொடுக்காமல் அழிந்து போவார்களென்று எண்ணினார்கள் (இல்லாவிட்டால் நான் சாகிறேன்).

*8. ஆதி. 30:2* அப்பொழுது யாக்கோபு ராகேலின் மேல் கோபங்கொண்டு: தேவனல்லோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார், நான் தேவனா? என்றான். அதுவரை பல உக்கிராணத்துவ சத்தியங்களைக் கொடுப்பதில் விசுவாச உண்மைத்துவத்துடன் ஊழியஞ் செய்திருந்த தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களின் (ராகேல்) மேல் அதிருப்தி கொண்டார்கள் (யாக்கோபு ராகேலின் மேல் கோபங் கொண்டு). இவ்வித கனிகளைக் கொடுப்பவர் தேவன் என்றும், தேவனுக்குப் பதிலாக அவர்கள் தனி நபர்களாக அவ்வித கனிகளைக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்ப்பது சரியானதாகுமா என்று அவர்களுடைய மனநிலை வார்த்தை மற்றும் செயலின் மூலம் அவர்களிடம் கேட்டார்கள் (நான் தேவனா? என்றான்). மேலும் இவ்வித இயக்கங்களை அப்பொழுது அபிவிருத்தி செய்வதைத் தேவன் தாமே தடை செய்திருக்கிறார் என்றும் சொன்னார்கள் (தேவன் அல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்). நடுகிறதற்கும் நீர் பாய்ச்சுகிறதற்கும் தேவனுடைய ஜனங்களுக்குச் சிலாக்கியம் கொடுக்கப்பட்டாலும், தேவன் ஒருவர் மட்டுமே அவருக்கேற்ற காலத்தில், அவருக்கேற்ற விதத்தில் விளையச் செய்வார் என்று அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும் (1கொரி. 3:7,8).

*9. ஆதி. 30:3* அப்பொழுது அவள்: இதோ, என் வேலைக்காரியாகிய பில்காள் இருக்கிறாளே; அவள் என் மடிக்குப் பிள்ளைகளைப் பெறவும், அவளாலாகிலும் என் வீடு கட்டப்படவும் அவளிடத்தில் சேரும் என்று சொல்லி, … ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்கள் (ராகேல்) இவ்வித இயக்கங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற ஆர்வமான விருப்பத்தினால், அந்த சத்தியங்களோடு தொடர்புடைய, அவைகளுக்குக் கீழ்ப்பட்ட, ஓரளவிற்கு தப்பறை கலந்த சத்தியங்களையும், அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் (வேலைக்காரியாகிய பில்காள்) தங்களுடைய மனநிலை, வார்த்தைகள் மற்றும் செயலின் மூலம் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்குக் கொடுத்தார்கள் (இதோ என் வேலைக்காரியாகிய பில்காள்). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) அவைகளோடு இணைந்து நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பார் ஆர்வமாக விரும்பின கனிகளைக் கொடுப்பார்களென்று, நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பார்கள் எதிர்பார்த்தார்கள் (அவளிடத்தில் சேரும்). மேலும் அந்த கனிகள் அவர்களுடைய ஒத்துழைப்பின் மூலம் கொண்டு வரப்பட்டவைகளாக இருப்பதால், அவர்களுக்குரிய கனிகளாக கருதப்படும் என்று எதிர்பார்த்தார்கள் (அவள் என் மடிக்குப் பிள்ளைகளைப் பெறவும்).

## தாண், நப்தலி, காத் மற்றும் ஆசேர்

*10. ஆதி. 30:4* அவனுக்குத் தன் வேலைக்காரியாகிய பில்காளை மனைவியாகக் கொடுத்தாள்; அப்படியே யாக்கோபு அவளைச் சேர்ந்தான். லேயாள் அடையாளப்படுத்தின சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் மிக அதிக தப்பறைகள் கலந்தவைகளாக இருந்தன. சில்பாள் அடையாளப்படுத்தின சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் அதை விட குறைந்த தப்பறைகள் கலந்தவைகளாக இருந்தன. மேலும் பில்காள் அடையாளப்படுத்தின சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் மிகவும் குறைந்த தப்பறைகள் கலந்தவைகளாக இருந்தன (ஏனென்றால் அவைகள் ராகேல் அடையாளப்படுத்தினவைகளுடன் மிக நெருங்கிய தொடர்புடையவைகளாக இருந்தன - *E Vol. 8, p. 381*). இவ்வாறாக மிகவும் குறைந்த தப்பறைகள் கலந்த இந்த சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களோடு (யாக்கோபு) இணைப்பதற்கு நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பார் காரணமாக இருந்தார்கள் (அவனுக்கு தன் வேலைக்காரியாகிய பில்காளை மனைவியாகக் கொடுத்தாள்).

*11. ஆதி. 30:5* பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். அடுத்ததாக நிஜ நிறைவேறுதலான யாக்கோபு, ஹுப்மையேர் (*Hubmaier*) என்பவரின் மூலம் செயல்பட்டார். (அவருடைய விசேஷித்த உதவியாளராகிய பிளாராக் –*Blaurock*- அவருக்கு உதவினார்). உண்மையாக நியாயமாக்கப்பட்டு பிரதிஷ்டை செய்தவர்கள் மட்டுமே தேவனுடைய உண்மையான ஜனங்களாக இருக்கிறார்கள் என்ற உக்கிராணத்துவ கோட்பாட்டை உபயோகித்து மேலும் ஒரு சிறுமந்தை இயக்கத்தைத் தொடங்கினார். மிகவும் குறைந்த தப்பறைகள் கலந்த சத்தியங்களும், அதைப் பிரயோகிப்பவர்களும் (பில்காள் - குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக சீமோன் மென்னோ –

*Simon Menno)* அதைக் கொண்டு பாப்டிஸ்ட் சபை *(Baptist Church)* என்ற மதப்பிரிவை உருவாக்கினார்கள் (ஒரு குமாரனைப் பெற்றாள், *E Vol. 8, pp. 381-400, 440, 690, 721-723)*.

*12.* ஆதி. *30:6* <u>அப்பொழுது ராகேல்: தேவன் என் வழக்கைத் தீர்த்து, என் சத்தத்தையும் கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குத் தாண் என்று பேரிட்டாள்.</u> இந்த மதப்பிரிவானது *(1)* மிக குறைந்த தப்பறைகள் கலந்த சத்தியங்களினாலும் அவைகளைப் பிரயோகிப்பவர்களினாலும் அபிவிருத்தி செய்யப்பட்டதினாலும், *(2)* நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பார் மற்றும் அவர்களுடைய பிள்ளைகளினால் பெரிதும் துன்புறுத்தப்பட்டாலும் அந்த மதப் பிரிவு அபிவிருத்தி அடைந்ததினாலும், *(3)* மற்ற எல்லா மதப்பிரிவுகளை விட இது ஆவியிலும் போதனைகளிலும் ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களுக்கும் அவைகளைப் பிரயோகிப்பவர்களுக்கும் (ராகேல்) மிக நெருக்கமாக இருந்ததினாலும் *(E Vol. 8, pp. 381, 392)*, தேவன் நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பாரை நிலை நாட்டினார் என்று அவர்கள் (நிஜ நிறைவேறுதலான ராகேல்) உரிமை பாராட்டினார்கள் (தேவன் என் வழக்கைத் தீர்த்து). அதாவது தேவன் அவர்களுடைய விண்ணப்பங்களைக் கேட்டு (என் சத்தத்தையும் கேட்டு), அவர்களுக்கொரு உருவகமான குமாரனைக் கொடுத்தார் (எனக்கொரு குமாரனைக் கொடுத்தார்). அந்த மதப் பிரிவின் மூலம் தேவன் அவர்களை நியாயம் தீர்த்ததாக அல்லது நிலை நாட்டினதாக அவர்கள் கருதினார்கள் [தாண் (நியாயாதிபதி)].

*13.* ஆதி. *30:7* <u>மறுபடியும் ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள்.</u> அடுத்ததாக நிஜ நிறைவேறுதலான யாக்கோபு, மைக்கேல் சர்வெட்டஸ் *(Michael Servetus)* என்பவரின் மூலம் செயல்பட்டார் (அவருடைய விசேஷித்த உதவியாளராகிய லேலியஸ் சோசினஸ் – *Laelius Socinus* -அவருக்கு உதவினார்). அவர் <u>“தேவன் ஒருவரே” மற்றும் “தேவனுடைய மிக உயர்வான குணஇயல்பு அன்பாகும்</u>” என்ற உக்கிராணத்துவ கோட்பாட்டைக் கொடுத்து, மற்றொரு சிறுமந்தை இயக்கத்தைத் தொடங்கினார். மிக குறைந்த தப்பறைகள் கலந்த சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் (பில்காள் -குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக ஃபாஸ்டஸ் சோசினஸ் – *Faustus Socinus*) அதைக் கொண்டு “யூனிடேரியோ-யூனிவர்சலிஸ்ட்” சபை *(Unitario-Universalist Church)* என்ற மதப்பிரிவை உருவாக்கினார்கள். இது கால வரிசையில் அடுத்ததாக அபிவிருத்தியடைந்த மதப்பிரிவாக இருந்தது (பில்காள்…இரண்டாம் குமாரனைப் பெற்றாள்; *E Vol. 8, pp. 421-437, 440, 690, 721, 726-729)*.

*14.* ஆதி. *30:8* <u>அப்பொழுது ராகேல்: நான் மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன் என்று சொல்லி, அவனுக்கு நப்தலி என்று பேரிட்டாள்.</u> இந்த உருவகமான குமாரனின் அபிவிருத்தி சம்பந்தமாக ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட சத்தியங்களைப் பிரயோகிப்பவர்கள் (ராகேல்) கோட்பாடு ரீதியான வாத விவாதங்களில் அதிகமாக ஈடுபட்டார்கள். விசேஷமாகத் திரித்துவம், மனுஷ சாவாமை, நித்திய நரக வேதனை ஆகிய கோட்பாடுகளை எதிர்த்து விவாதித்தார்கள். ரோமன் கத்தோலிக்க , லூத்தரன் மற்றும் கால்வினிஸ்ட் மதப்பிரிவுகளில் விசேஷமாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட நிஜ நிறைவேறுதலான லேயாளுடன் அவர்கள் கடுமையாகப் போராடினதாகக் கூறினார்கள் (நான் மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி). மேலும் இந்த விஷயங்கள் சம்பந்தமாக அவர்களிடமிருந்த அதிக தூய்மையான சத்தியத்தின் மூலமும், சத்தியத்தின் ஆவியின் மூலமும் இந்தப் போராட்டத்தில் அனுகூலத்தையும் மேலான நிலையையும் அடைந்ததாகக் கூறினார்கள். (மேற்கொண்டேன்). ஆகையால் இந்த உருவகமான குமாரன் அதிக போராட்டத்தை உண்டு பண்ணின ஒன்றாகக் கருதினார்கள் [நப்தலி (போராடுவது)]. நிஜ நிறைவேறுதலான பில்காள் உண்டு பண்ணின இந்த இரண்டு மதப்பிரிவுகளும் (“பாப்டிஸ்ட்” மற்றும் “யூனிடேரியோ-யூனிவர்சலிஸ்ட்” சபை) ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்தவைகளாக இருந்தாலும், அரசாங்கமும் சபையும் சேர்ந்தவைகளாக இருக்கவில்லை என்பதைக் கவனிக்கவும்.

*15.* ஆதி. *30:9* <u>லேயாள் தான் பிள்ளைபெறுகிறது நின்றுபோனதைக் கண்டு, தன் வேலைக்காரியாகிய சில்பாளை அழைத்து, அவளை யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தாள்.</u> நிஜ நிறைவேறுதலான பில்காள் வகுப்பார், நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பாருக்காக மதப்பிரிவு இயக்கங்களை உருவாக்கிக் கொண்டிருக்கையில், மிக அதிக தப்பறைகள் கலந்த சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் (லேயாள்)மதப்பிரிவு இயக்கங்களை உண்டு பண்ணுவதை நிறுத்தி விட்டதை உணர்ந்தார்கள் (லேயாள் தான் பிள்ளை பெறுகிறது நின்று போனதைக் கண்டு). ஆகையால் அவைகளோடு தொடர்புடைய, அவைகளுக்குக் கீழ் நிலையான, குறைந்த தப்பறைகள் கலந்த சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் (சில்பாள்) தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்குக் (யாக்கோபு) கொடுத்தார்கள் (தன் வேலைகாரியாகிய சில்பாளை … யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தாள்). இந்த ஊழியக்காரர்கள் அவைகளோடு இணைந்து நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பாருக்காகக் கூடுதலான மதப்பிரிவு இயக்கங்களை அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்தார்கள்.

*16.* ஆதி. *30:10,11* <u>லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். அப்பொழுது லேயாள்: ஏராளமாகிறதென்று சொல்லி, அவனுக்குக் காத் என்று பேரிட்டாள்.</u> நிஜ நிறைவேறுதலான யாக்கோபு, தாமஸ் கிரேன்மர் *(Thomas Cranmer)* என்பவரின் மூலம் செயல்பட்டார் (அவருடைய விசேஷித்த உதவியாளராகிய லாட்டிமர் – *Latimer-* அவருக்கு உதவினார்). <u>தேவன் யெஷூ ஆ மற்றும் சபையை, மாம்சத்திலிருந்த போது, மதசார்பற்ற காரியங்களில் சமுதாய அதிகாரங்களுக்குக் கீழ்ப்படுத்தினாரென்ற</u> உக்கிராணத்துவ கோட்பாட்டை உபயோகித்து அவரொரு சிறுமந்தை இயக்கத்தைத் தொடங்கினார். நிஜ நிறைவேறுதலான சில்பாள் வகுப்பார் (குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக எலிசபெத் ராணி – *Queen Elizabeth*, செசில் – *Cecil* -மற்றும் பார்கர்- *Parker-* என்பவர்கள்) அதைக் கொண்டு, எபிஸ்கோபல் சபை *(Episcopal Church)* என்ற மதப்பிரிவை உண்டாக்கினார்கள் (சில்பாள்…ஒரு குமாரனைப் பெற்றாள்; *E Vol. 8, pp. 254-283, 689, 703-705)*. நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பார் இந்த உருவகமான குமாரனின் பிறப்பினால் பெரிதும் களி கூர்ந்தார்கள். அதைக் கூடுதலான செழிப்பு மற்றும் அதிர்ஷ்டத்தின் ஒரு சான்றாகவும், இவ்வித பல இயக்கங்களை மேலும் உண்டு பண்ணுவதின் ஒரு வாக்குத்தத்தமாகவும் கருதினார்கள்

*[காத் (அதிர்ஷ்டம், ஏராளம்)].*

*17. ஆதி. 30:12* <u>பின்பு லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள்.</u> அடுத்ததாக நிஜ நிறைவேறுதலான யாக்கோபு, ஜான் வெஸ்லி *(John Wesley)* என்பவரின் மூலம் செயல்பட்டார் (அவருடைய விசேஷித்த உதவியாளராகிய சார்லஸ் வெஸ்லி – *Charles Wesley* -அவருக்கு உதவினார்). <u>பரிசுத்தமாகுதலின் மையமாக இருக்கிற தியாக அன்பு தேவனுடைய ஜனங்களுக்குத் தேவன் நியமித்த இலக்காகும்</u> என்ற உக்கிராணத்துவ கோட்பாட்டை உபயோகித்து, மற்றொரு சிறுமந்தை இயக்கத்தை உருவாக்கினார். நிஜ நிறைவேறுதலான சில்பாள் வகுப்பார் (குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக டாக்டர் கோக் – *Dr. Coke*) அந்த கோட்பாட்டைக் கொண்டு மெத்தடிஸ்ட் சபை *(Methodist Church)* என்ற மதப்பிரிவை உண்டாக்கினார்கள் (சில்பாள்…. இரண்டாம் குமாரனைப் பெற்றாள்; *E Vol. 8, pp. 400-420, 440, 723-726*). இந்த மதப்பிரிவில் தெய்வீக அன்பென்ற உக்கிராணத்துவ கோட்பாடு இருந்ததால், நிஜ நிறைவேறுதலான சில்பாள் உண்டு பண்ணின முதல் மதப்பிரிவை காட்டிலும், நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பார் உண்டு பண்ணின மதப்பிரிவுகளைக் காட்டிலும் இந்த வகுப்பாருக்குச் சிறுமந்தையின் ஆவியோடு அதிக நெருக்கமான தொடர்பு இருந்தது *(E Vol. 8, p. 723)*.

*18. ஆதி. 30:13* <u>அப்பொழுது லேயாள்: நான் பாக்கியவதி, ஸ்திரீகள் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று சொல்லி, அவனுக்கு ஆசேர் என்று பேரிட்டாள்.</u> நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பார், இந்த உருவகமான பிள்ளை பிறந்த பிறகு பெரிதும் மகிழ்ச்சி அடைந்து, தாங்கள் அதிர்ஷ்டசாலிகள் என்று நினைத்தார்கள் (நான் பாக்கியவதி). அதில் மற்ற மதப்பிரிவுகள் எல்லாம் அவர்களுக்கு மரியாதை செலுத்தி அவர்களை அதிக தயவு பெற்றவர்களாகக் கருதுவார்கள் என்று எண்ணினார்கள் (ஸ்திரீகள் என்னைப் பாக்கியவதி என்பார்கள்). இந்த மதப்பிரிவை சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் கொண்டு வரும் ஒன்றாகக் கருதினார்கள் [ஆசேர் (சந்தோஷம், பாக்கியம்); *E Vol. 8, pp. 400-401*]. இவ்வாறாக நிஜ நிறைவேறுதலான யாக்கோபின் பிள்ளைகள் பிறப்பது பிரிட்டன் நாட்டிற்கு மாற்றப்பட்டது. நிஜ நிறைவேறுதலான சில்பாள் வகுப்பார் உண்டு பண்ணின இரு மதப்பிரிவுகள் (எபிஸ்கோப்பல் மற்றும் மெத்தடிஸ்ட் சபை )ஐரோப்பா கண்டத்திலுள்ள மற்ற மதப்பிரிவுகளிலிருந்து தனிப்பட்டவைகளாக பிரிட்டன் நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்டன.

## தூதாயீம் கனிகள்

*19. ஆதி. 30:14* <u>கோதுமை அறுப்பு நாட்களிலே ரூபன் வயல்வெளியிலே போய், தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்து, அவைகளைக் கொண்டுவந்து தன் தாயாகிய லேயாளிடத்தில் கொடுத்தான். அப்பொழுது ராகேல் லேயாளை நோக்கி: உன் குமாரனுடைய தூதாயீம் கனியில் எனக்குக் கொஞ்சம் தா என்றாள்.</u> கிட்டத்தட்ட கி.பி. 863-ல் கிரேக்க கத்தோலிக்க சபையைச் (ரூபன்) சேர்ந்த இரு குருமார்களாகிய தெசலோனிகேயா பட்டணத்தைச் சேர்ந்த சிரிலஸ் (அல்லது கான்ஸ்டான்டைன்) – *Cyrillus of Thessalonica (Constantine)* - மற்றும் அவருடைய சகோதரனாகிய மெத்தோடியஸ் *(Methodius)* மொராவியா என்ற இடத்தின் அதிபதியாகிய ராட்டிஸ்லாவ் *(Ratislav – Duke of Moravia)* என்பவரின் அழைப்பை ஏற்று மொராவியாவிற்கு வந்தார்கள். அவர்கள் மொராவியா வாசிகளுக்குக் கிரேக்க ஆராதனை முறைமைகளை அறிவித்தார்கள். சிரிலஸ் மொராவியாவில் ஊழியஞ் செய்யும் போது சிலாவிக் மொழியை *(Slavic Language)* கற்றுக் கொண்டு, வேதாகமத்தின் பெரும் பகுதிகளையும், மதசார்ந்த மற்ற புத்தகங்களையும் மொழிபெயர்த்தார். அதற்காகச் சிலாவிக் மொழியில் புது வகையான எழுத்துக்களையும் உருவாக்கினார். இவ்வாறாக அங்கே கிறிஸ்தவ மதத்தை நிலை நாட்டுவதற்குக் கிரேக்க கத்தோலிக்க சபை (நிஜ நிறைவேறுதலான ரூபன்) காரணமாக இருந்தது.

*20.* 14-ம் மற்றும் 15-ம் நூற்றாண்டுகளில் மொராவியா இடத்தைச் சேர்ந்த அநேகர், அவ்விடத்தில் நடந்து கொண்டிருந்த ஜான் ஹஸ் *(John Huss)* என்பவரின் மறுமலர்ச்சி இயக்கங்களிலும் மற்ற மறுமலர்ச்சி இயக்கங்களிலும் சேர்ந்து கொண்டார்கள். மறுமலர்ச்சிகள் எதிர்க்கப்படும் காலத்திலும் *(Counter reformation)*, முப்பது வருட யுத்தத்தின் *(Thirty Years War)* காலத்திலும் [கி.பி 1618-1648) - புரட்டஸ்டன்ட்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் நடந்த யுத்தம்] மொராவியாவிலும் கடுமையான துன்புறுத்தல் உண்டானது *(E Vol. 13, p. 403)*. மொராவியாவைச் சேர்ந்த பல சகோதரர்கள் ரத்த சாட்சிகளாக மரித்தார்கள். மற்றவர்கள் மறைவிடங்களுக்குள் போனார்கள். 1722-ம் ஆண்டிலிருந்து, அவர்களில் எஞ்சியுள்ளவர்கள் ஜெர்மனிக்குத் தப்பி ஓடி, கவுன்ட் சின்சென்டாருஃப் *(Count Zinzendorf)* என்பவருக்குச் சொந்தமாயிருந்த இடங்களிலும், பயட்டிஸ்ட் இயக்கத்தைச் *(Pietists)* சேர்ந்த மற்றவர்களின் இடங்களிலும் குடியிருந்தார்கள். மொராவியாவைச் சேர்ந்த சகோதரர்கள் இவ்விடத்திற்கு வரும்போது அனேகர் பயட்டிஸ்ட் இயக்கத்திற்குள் சேர்த்துக் கொள்ளப் பட்டுக் கொண்டிருந்தார்கள் (கோதுமை அறுப்பு நாட்களிலே ரூபன் வயல் வெளியிலே போய்; *E Vol. 13, pp. 527-537*).

*21.* இந்த மொராவியாவைச் சேர்ந்த சகோதரர்கள் இந்த செயல் எல்லையில், ஆவியின் கனிகளை, விசேஷமாக அன்பை வளர்த்துக் கொள்வது சம்பந்தப்பட்ட தேவ வார்த்தையின் விசேஷித்த போதனைகள் பெரிதும் வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தார்கள் [வயல் வெளியிலே …. தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்து (உன். 7:13-ம் வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்; *E Vol. 11, p. 712*)]. இந்த போதனைகளைக் குறித்து அவர்கள் புரிந்து கொண்ட காரியங்களை, மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பாருக்குத் தெரிவித்தார்கள். விசேஷமாக சின்சென்டாருஃப் மற்றும் மற்ற தலைவர்கள் அக்காலத்தின் நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பாராக இருந்தார்கள் (தன் தாயாகிய லேயாளிடத்தில் கொடுத்தான்).

*22.* ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட சத்தியங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்கள் (ராகேல்), விசேஷமாக ஜான் வெஸ்லி மற்றும் மெத்தடிஸ்ட்டு இயக்கத்தைச் சேர்ந்த மற்ற சிறுமந்தை அங்கத்தினர்கள், இருதயத்தில் கிறிஸ்துவின் சாயலை அபிவிருத்தி செய்யும் அன்பை ஊக்குவிக்கும் தேவ வார்த்தையின் விசேஷித்த போதனைகளுக்காக (தூதாயீம் கனிகள்) மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பாரிடம் வேண்டிக் கொண்டார்கள். மொராவியாவைச் சேர்ந்தவர்களுடன் வெஸ்லிக்கிருந்த தொடர்புகளில் இதை நாம் விசேஷ

மாகக் காண்கிறோம் [E Vol. 8, p. 409; E Vol. 13, p. 545 - தூதாயீம் கனியில் எனக்குக் கொஞ்சம் தா (அன்பின் பழங்கள் - இந்த கனியைச் சாப்பிடுவதின் மூலம் கர்ப்பம் தரிக்கப்படக் கூடுமென்று ராகேலின் காலத்தில் நம்பப் பட்ட கருத்து இக்காலத்திலும் சில இடங்களில் இருக் கிறது)]. அந்த போதனைகளின் மூலம் தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் ஒரு இயக்கத்தை உண்டு பண்ணி கனி கொடுக்க வேண்டு மென்று நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பார் பெரிதும் விரும்பினார்கள்.

23. ஆதி. 30:15 அதற்கு அவள்: நீ என் புருஷனை எடுத்துக்கொண்டது அற்பகாரியமா? என் குமாரனுடைய தூதாயீம் கனிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமோ என்றாள்; அதற்கு ராகேல்: உன் குமாரனுடைய தூதாயீம் கனிகளுக்கு ஈடாக இன்று இரவு அவர் உன்னோடே சயனிக்கட்டும் என்றாள். நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பார் இந்த வேண்டுகோளுக்கு அனுகூலமாகப் பிரதிகிரியை செய்யவில்லை. நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பார் நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப் பாரைத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களின் மதிப்பீட்டிலிருந்தும் நேசத்திலிருந்தும் தூரமாகத் தள்ளி னதாகத் தங்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப் பார் கூறினார்கள். 1738-ம் ஆண்டு முதல் சின்சென் - டாருஃப், வெஸ்லியிடம் கர்வமாகவும் கோபமாகவும் நடந்து கொண்டதில் இதை நாம் காண்கிறோம் (E Vol. 13, pp. 538-544; நீ என் புருஷனை எடுத்துக் கொண்டது அற்பகாரியமா?). மேலும் இப்போது அவர்கள் இந்த போதனைகள் சம்பந்தப்பட்ட தப்பறைகளை ஏற்றுக் கொள்ளாமல், அன்பை ஊக்குவிக்கும் விசேஷித்த அம்சங் களில் தேவ வார்த்தையையும் தங்களிடமிருந்து எடுத்துக் கொள்வதாகக் குற்றஞ் சாட்டினார்கள் (என் குமார னுடைய தூதாயீம் கனிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமோ).

24. இதற்குப் பதிலாக, நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பாரின் அங்கத்தினர்கள் அவர்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் நிஜ நிறை வேறுதலான லேயாள் வகுப்பாருக்குப் பின்வரும் உறுதி மொழியைக் கொடுத்தார்கள்: நிஜ நிறைவேறுதலான ராகேல் வகுப்பாரின் விருப்பம் பூர்த்தி செய்யப்பட்டால், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் நிஜ நிறை வேறுதலான லேயாள் வகுப்பாரோடு இணைந்திருப் பதைத் தடுக்க மாட்டார்கள். இவ்வாறாக நிஜ நிறை வேறுதலான ராகேல் வகுப்பார், அன்பை ஊக்குவிக்கும் இந்த விசேஷித்த அம்சங்களில் தேவ வார்த்தையைத் தங்களுக்குரியதாக்கிக் கொண்டார்கள். நிஜ நிறை வேறுதலில் ஆதி. 30:14,15-ம் வசனங்களின் சம்பவங்கள் ஆதி. 30:12,13-ம் வசனங்களின் சம்பவங்களுக்கு முன் நிகழ்ந்தன (வச. 12,13-ன் நிஜ நிறைவேறுதல் 1784-ம் வருடத்திலிருந்து நிகழ்ந்தது என்பது வெளிப்படையா யிருக்கிறது. ஏனென்றால் அந்த வருடத்தில் தான் வெஸ்லியினால் உருவாக்கப்பட்ட இயக்கம் ஒரு மதப் பிரிவாக ஆக்கப்படத் தொடங்கினது (ஆசேரின் பிறப்பு - E Vol. 8, p. 403). அடையாளத்திலும் கூட ஆதி. 30:14,15-ம் வசனங்களின் சம்பவங்கள் ஆதி. 30:12,13-ம் வசனங்களின் சம்பவங்களுக்கு முன் நிகழ்ந்திருக்க வேண்டும். இதை நாம் பின்பு நிரூபிப்போம். 14 மற்றும் 15-ம் வசனங்களின் சம்பவங்களில் சில்பாள் ஈடுபடாதிருந்ததால் அது சாத்தியமாயிற்று.

25. ஆதி. 30:16 சாயங்காலத்தில் யாக்கோபு வெளியிலிருந்து வருகையில் லேயாள் புறப்பட்டு அவனுக்கு எதிர்கொண்டுபோய்: என் குமாரனுடைய தூதாயீம் கனிகளால் உம்மைக் கொண்டேன்; ஆகையால், நீர் என்னிடத்தில் வரவேண்டும் என்றாள்; அவன் அன்று இரவு அவளோடே சயனித்தான். 17 மற்றும் 18-ம் நூற் றாண்டுகளில் தேவனுடைய ஜனங்கள் அதிகமதிகமாக வும் படிப்படியாகவும் அமெரிக்காவிற்கு வந்தார்கள். ஐரோப்பாவில் நடந்து கொண்டிருக்கிற துன்புறுத்த லிலிருந்துத் தப்பித்துக் கொள்வதற்காகவும் மற்ற காரணங்களுக்காகவும் அமெரிக்காவிற்கு வந்தார்கள். இவ்வாறாக 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிஜ நிறை வேறுதலான யாக்கோபின் பிள்ளைகளின் பிறப்பு சம்பந்தப்பட்ட காரியங்கள் ஐரோப்பாவிலிருந்து அமெ - ரிக்காவிற்கு மாறிற்று. தேவனுடைய விசேஷித்த ஊழியக் காரர்கள் ஐரோப்பாவில் ஊழியஞ் செய்து கொண்டிருந்த செயல் எல்லையிலிருந்து வட அமெரிக்காவில் புதிதாகக் குடியிருந்த ஜனங்களின் செயல் எல்லைகளுக்குத் தங்க ளுடைய விசேஷித்த கவனத்தைத் திருப்பினார்கள். (யாக் கோபு வெளியிலிருந்து வருகையில்) இந்த புதிதான குடியிருப்புகளிலுள்ள நிஜ நிறைவேறுதலான லேயாளின் அங்கத்தினர்கள் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர் களோடு, தொடர்பு கொண்டு, அமெரிக்காவில் இயக்கங் களை உண்டு பண்ணும்படிக்கு அவர்களோடு இணைந்து கொள்ள அவர்களை விரைவாக அழைத்தார்கள் (லேயாள் புறப்பட்டு அவனுக்கு எதிர் கொண்டு போய்…. நீர் என்னிடத்தில் வரவேண்டும்). இந்த நிஜ நிறை வேறுதலான லேயாள் வகுப்பார் அன்பை ஊக்குவிக்கும் விசேஷ அம்சங்களில் தேவ வார்த்தையை நிஜ நிறை வேறுதலான ராகேல் வகுப்பாருக்குக் கொடுத்த தால், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு மன நிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் தெரிவித் தார்கள் (என் குமாரனுடைய தூதாயீம் கனிகளால் உம்மைக் கொண்டேன்). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள் (அவன்… அவளோடே சயனித்தான்).

## இசக்கார், செபுலோன், தீனாள், யோசேப்பு

26. ஆதி. 30:17,18 தேவன் லேயாளுக்குச் செவிகொடுத்தார். அவள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஐந்தாம் குமாரனைப் பெற்றாள். அப்பொழுது லேயாள்: நான் என் வேலைக்காரியை என் புருஷனுக்குக் கொடுத்த பலனைத் தேவன் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்கு இசக்கார் என்று பேரிட்டாள். நிஜ நிறை வேறுதலான யாக்கோபு, தாமஸ் கேம்ப்பெல் (Thomas Campbell) என்பவரின் மூலம் செயல்பட்டார் (அவருடைய விசேஷித்த உதவியாளராகிய பார்டன் ஸ்டோன் –Barton Stone - அவருக்கு உதவினார்). வேதாகமம் மட்டுமே தேவ னுடைய ஜனங்களின் விசுவாச பிரமாணமாக இருந்து, அவர்களுடைய ஐக்கியத்தின் மையமாக இருக்க வேண் டும் என்ற உக்கிராணத்துவ கோட்பாட்டை உபயோகித்து 1809-ம் வருடத்தில் ஒரு சிறுமந்தை இயக்கத்தைத் தொடங்கினார். அது சம்பந்தப்பட்ட தப்பறைகள் கலந்த சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் (லேயாள் - குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக அலெக்ஸ்சாண்டர் கேம்ப்பெல் – Alexander Campbell) அந்த கோட்பாட்டைக் கொண்டு கிறிஸ்டியன் அல்லது டிசைப்பிள் சபை (Christian or Disciple Church) என்ற மதப்பிரிவை உண்டாக்கினார்கள்

(குமாரனைப் பெற்றாள்; E Vol. 8, pp. 201-206, 689, 694, 695; E Vol. 12, p. 763). நிஜ நிறைவேறுதலான லேயாள் வகுப்பார் நிஜ நிறைவேறுதலான சில்பாள் வகுப்பாரைத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்குக் கொடுத்ததின் சம்பளமாக அல்லது வெகுமதியாகத் தேவன் அவர்களுக்கு இந்த உருவகமான குமாரனைக் கொடுத்ததாகச் சொன்னார்கள் [இசக்கார் (கூலி, வெகுமதி)].

27. ஆதி. 30:19,20 அப்புறம் லேயாள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஆறாம் குமாரனைப் பெற்றாள். அப்பொழுது லேயாள்: தேவன் எனக்கு நல்ல ஈவைத் தந்தார்; என் புருஷனுக்கு நான் ஆறு குமாரரைப் பெற்றபடியால், இப்பொழுது அவர் என்னுடனே வாசம் பண்ணுவார் என்று சொல்லி, அவனுக்குச் செபுலோன் என்று பேரிட்டாள். அடுத்ததாக நிஜ நிறைவேறுதலான யாக்கோபு, வில்லியம் மில்லர் (William Miller) என்பவரின் மூலம் செயல்பட்டார் (அவருடைய விசேஷித்த உதவியாளராகிய உல்ஃப் – Wolff- அவருக்கு உதவினார்). தீர்க்கதரிசன கால கணக்கானது இரண்டாம் வருகையையும் ராஜ்யத்தையும் சுட்டிக்காட்டும் என்றும், அந்த ராஜ்யம் தீமையை அழித்து நீதியை நிலைநாட்டும் என்றும் அவர் கூறி, இந்த உக்கிராணத்துவ கோட்பாட்டை உபயோகித்து ஒரு சிறுமந்தை இயக்கத்தைத் தொடங்கினார். அது சம்பந்தப்பட்ட தப்பறைகள் கலந்த சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் (லேயாள் - குறிப்பாகக் கிரீடத்தை இழந்த தலைவர்கள், எடுத்துக்காட்டாக ஜோஷ்வா ஹிம்ஸ் – Joshua Himes) அந்த கோட்பாட்டைக் கொண்டு செக்கண்ட் அட்வென்டிஸ்ட் சபை (Second Adventist Church) என்ற மதப்பிரிவை உருவாக்கினார்கள் (குமாரனைப் பெற்றாள்; E Vol. 8, pp. 206-214, 439, 689, 695, 696). நிஜ நிறைவேறுதலான லேயாளின் இந்த அங்கத்தினர்களைத் தேவன் பெரிதும் பெருகச் செய்து உண்மையாகவே அவர்களை ஆசீர்வதித்தார் என்று சொன்னார்கள் (தேவன் எனக்கு நல்ல ஈவைத் தந்தார்). மேலும் அவர்கள் உண்டு பண்ணின பல இயக்கங்களின் நிமித்தம் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் அவர்களை அதிகமாக விரும்பி, முடிவு பரியந்தமும் அவர்களோடு வாசம் பண்ணுவார்கள் என்று தைரிய உறுதியுடன் எதிர்பார்த்தார்கள் [செபுலோன் (குடியிருப்பு)].

28. இதனோடு, லேயாளின் மூலமும் வேலைகாரிகளாகிய பில்காள் மற்றும் சில்பாளின் மூலமும் யாக்கோபுக்குப் பிறந்த ஆண் பிள்ளைகளைப் பற்றிய விவரம் முடிவுக்கு வருகிறது. இந்த அடையாள காட்சியில் காங்கிரிகேஷனல் (Congregational) சபை மற்றும் “மட்டுமீறிய மத பற்றுள்ள” (Fanatical) மற்ற பிரிவுகள் தனியாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றியிருக்கும் கோத்திரங்களின் அடையாளத்திலும், அணி வகுப்புகளாக இஸ்ரயேல் கோத்திரங்கள் செய்த பிரயாணத்தின் அடையாளத்திலும் அவ்விரண்டும் தனியாகக் குறிப்பிடப்படுகின்றன. ஆனால் இங்கே காங்கிரிகேஷனல் சபை கால்வினிஸ்டிக் சபையின் ஒரு பகுதியாகவும், “மட்டுமீறிய மத பற்றுள்ள” மற்ற பிரிவுகள் மேலே சொல்லப்பட்ட 10 மதப்பிரிவுகளிலுள்ள மதவெறியுடைய தனி நபர்களிலும் குறித்துக் காட்டப்படுகின்றன (E Vol. 13, p. 9).

29. ஆதி. 30:21 பின்பு அவள் ஒரு குமாரத்தியையும் பெற்று, அவளுக்குத் தீனாள் என்று பேரிட்டாள். 1846-ம் வருடத்தில் (2300 நாட்களின் முடிவு – தானி. 8:14, P Vol. 3, p.119) அட்வென்டிஸ்ட் இயக்கத்திலுள்ள (Adventism) நிஜ நிறைவேறுதலான எலியா மற்றும் எலிசா வகுப்பார் சுத்திகரிக்கப்பட்ட வாசஸ்தலமானார்கள். அவர்கள் பெரிய பாபிலோனிலிருந்தும், திருப்பலி பூஜை சம்பந்தப்பட்ட தீட்டுப்படுத்தும் தப்பறைகளிலிருந்தும் பிரிக்கப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்ட வாசஸ்தலமாக இருந்தார்கள் (E Vol. 8, p. 206; E Vol. 6, p. 460). மேலும் 1846 -ம் வருடத்தில் வில்லியம் மில்லர் (William Miller) மூலம் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட நிஜ நிறைவேறுதலான எலியா வகுப்பார் நிஜ நிறைவேறுதலான எலிசா வகுப்பாரை அபிஷேகம் பண்ணினார்கள் (E Vol. 3, pp. 35-38, 398, 401, 402). இதின் சில அம்சங்கள் இப்பொழுது நாம் பார்த்துக் கொண்டிருக்கிற அடையாளத்திலும் காண்பிக்கப்படுகின்றன: 1846 -ம் வருடத்தில் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் ஒரு இயக்கத்தைத் தொடங்கினார்கள். பிற்காலத்தில், அது சம்பந்தப்பட்ட தப்பறைகள் கலந்த சத்தியங்களும், அவைகளைப் பிரயோகிப்பவர்களும், விசேஷமாக J.F. ரூதர்ஃபோர்டு என்பவர் எபிப்பெனியின் ஆரம்ப காலத்தில் அதை “வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொஸைட்டி” (Watch Tower Bible and Tract Society) என்ற ஒரு மதப்பிரிவாக உருவாக்கினார்கள் (JFR மற்றும் மற்ற நிர்வாக அங்கத்தினர்கள் கீழுள்ள ஸ்தாபனம்). அது ஓரளவிற்குச் சத்திய இயக்கமாகவும், ஓரளவிற்குப் பெயர் சபை இயக்கமாகவும் இருந்ததால் ஒரு மதப்பிரிவு இயக்கமாக (Sectarian Movement) இருந்தது (குமாரத்தியையும் பெற்று). அதை இவ்வாறு பிரயோகித்தவர்கள், இந்த உருவகமான பிள்ளையைத், தங்களை நிலைநாட்டின மற்றும் நிலைநாட்டப் போகிற ஒன்றாகக் கருதினார்கள் [தீனாள் ( நியாயத்தீர்ப்பு; E Vol. 10, p. 602)].

30. ஆதி. 30:22 தேவன் ராகேலை நினைத்தருளினார்; அவளுக்குத் தேவன் செவிகொடுத்து, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார். சுவிசேஷ யுகத்தின் “இடைப்பட்ட காலத்தின்” பல நூற்றாண்டுகளில், ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களும், அவைகளைப் பிரயோகிப்பவர்களும் (ராகேல்), தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் எவ்வித கனிதரும் இயக்கத்தையும் தங்களுக்கென்று உருவாக்கிக் கொள்ளாதிருந்தார்கள். ஆனால் சுவிசேஷ யுகம் முழுவதும், அவர்கள் அதை ஆர்வமாக விரும்பி இருந்தார்கள். ஆனால் இப்போது நீண்ட காலத்திற்குப் பிறகு அவர்களுடைய ஆர்வமான விருப்பங்கள் நிறைவேற்றப்படப் போகின்றன. தேவனுடைய ஏற்ற காலம் வந்திருப்பதால், அவர் அவர்களையும் அவர்களுடைய விண்ணப்பங்களையும் நினைவுகூர்ந்து (தேவன் ராகேலை நினைத்தருளி … செவி கொடுத்து) அவர்கள் கனிதருவதற்குரிய வழியைத் திறந்தார் (அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்).

31. ஆதி. 30:23,24 அவள் கர்ப்பவதியாகி ஒரு குமார னைப் பெற்று: தேவன் என் நிந்தையை நீக்கிவிட்டார் என்றும், இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார் என்றும் சொல்லி, அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டாள். 1846 -ம் வருடத்தில் சுத்திகரிக்கப்பட்ட வாசஸ்தலத்தில் உள்ள நிஜ நிறைவேறுதலான யாக்கோபு ஒரு இயக்கத்தைத் தொடங்கினார் (E Vol. 8, p. 8). ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் (ராகேல்), அதைக் கொண்டு, அதை அபிவிருத்தி செய்தார்கள். அது 1874- ல் பரூஷியா காலத்தின் சிறுமந்தையாகவும் அதின் இயக்கமாகவும் வெளிப்பட்டது (அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று). அதை பிரயோகித்தவர்கள் இந்த விளைவைக் கண்டு

மிகுந்த சந்தோஷத்துடன் (தானி. 12:12) , தேவன் உண்மை யாகவே மலட்டு தன்மை சம்பந்தப்பட்ட நிந்தையை அவர்களிடமிருந்து நீக்கினார் என்று உறுதி யாகக் கூறி னார்கள். அதாவது தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் ஒரு கனிதரும் இயக்கத் தைக் கொண்டு வருவது சம்பந்தமாக அவர்கள் மேலிருந்த நிந்தையை நீக்கினார் என்று உறுதியாகக் கூறினார்கள் (தேவன் என் நிந்தையை நீக்கி விட்டார்). மேலும் இந்த சிறுமந்தை இயக்கத்தைத் தேவன் நிச்சயமாகப் பெருகச் செய்வார் என்று கூறி னார்கள் [யோசேப்பு (பெருக்கம், கூட்டப்படுதல்)]. மேலும் வேத வசனங்களுக்கு இணக்கமாகத் (வெளி. 7:9-17), தேவன் அவர்களுக்குத் தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் மற்றொரு கனி தரும் இயக்கத்தை நிச்சயமாகக் கொடுப்பாரென்று அறி வித்தார்கள் (இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார்). இந்த கூடுதலான உருவகமான குமாரன் நிஜ நிறைவேறுதலான பென்யமீனாகிய எபிப்பெனி திரள் கூட்டத்தார் மற்றும் அதின் இயக்கமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை (E Vol. 13, pp. 8, 19, 20).

## ஏழு வருடங்களில் பன்னிரண்டு பிள்ளைகள் பிறப்பது

*32.* இந்தப் பன்னிரண்டு பிள்ளைகள் - பதி னொரு குமாரர்கள் மற்றும் ஒரு குமாரத்தி - ஏழு வருடங் களுக்குள் பிறந்தார்கள் என்று வேதாகமம் போதிக்கிறது. அது பின்வரும் உண்மைகளிலிருந்து வெளிப்படையா யிருக்கிறது: (1) யாக்கோபு ராகேலுக்காகவும் லேயாளுக் காகவும் பதினான்கு வருடங்களும் லாபானின் மந்தைக் காக ஆறு வருடங்களும் அவனிடத்தில் சேவித்தார் (ஆதி. 31:41); (2) யாக்கோபு மணம் செய்து கொண்ட ஏழு வருடங்களுக்குப் பிறகும், அந்த மந்தைகளுக்காகச் சேவிக்கும் ஆறு வருடங்கள் தொடங்குவதற்குச் சற்று முன்பும் யோசேப்பு பிறந்தார் (ஆதி. 29:27, 28; 30:25-36). வேதாகமத்தை இலக்கணமாகக் கருதி விமர்சிப்பவர்கள் (Higher Critics) இந்த வேதாகம போதனையை எதிர்த்து, வேதாகமம் தெய்வீக அகத்தூண்டுதலினால் எழுதப்பட்ட ஒன்றல்ல என்பதை நிரூபிக்க இதை உபயோகிக் கிறார்கள். ஒரு பிள்ளை பெற்றெடுக்கப்படும் வரை, அதற்கு அடுத்த பிள்ளை ஜெநிப்பிக்கப்படவில்லை என்று அவர்கள் தவறாக எண்ணுகிறார்கள். வேதாகமம் அதை அவ்வாறு சொல்லவில்லை. வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட கால வரிசையில் அவர்கள் ஒவ்வொரு வரும் பிறந்தார்கள் என்று மட்டுமே வேதாகமம் காண்பிக்கிறது. எல்லா பிள்ளைகளின் காரியத்திலும், ஒரு பிள்ளை பெற்றெடுக்கப்படும் வரை, அதற்கு அடுத்த பிள்ளை ஜெநிப்பிக்கப்படவில்லை என்பதை வேதாகமம் அர்த்தப்படுத்தவில்லை. ஒரே தாய் ஒன்றுக்கு மேலாக பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் போது, அவளுடைய ஒரு பிள்ளை பிறக்கும் வரை அடுத்த பிள்ளை ஜெநிப் பிக்கப்படவில்லை என்பது உண்மை. ஆனால் நான்கு தாய்கள் இருக்கும்போது, அது அவ்வாறு இருப்பது அவசியமில்லை என்பதைக் காண்போம். யாக்கோபு லேயாளையும் ராகேலையும் மணம் செய்து கொண்டதற்கு ஏழு வருடங்களுக்குள் (84 மாதங்கள்) பன்னிரண்டு பிள்ளைகள் எவ்வாறு பிறந்திருக்கக் கூடும் என்பதைப் பார்ப்போம். ஏற்கனவே பார்த்ததைப் போல் யாக்கோபு லேயாளை மணம் செய்து கொண்ட ஒரு வாரத்திற்குப் பிறகு ராகேலை மணம் செய்து கொண்டார் (ஆதி. 29:27,28).

*33.* திருமணத்திற்கு ஒன்பது மாதங்களுக்குப் பிறகு ரூபன் பிறந்தார் என்றும், லேயாளின் அடுத்த மூன்று பிள்ளைகள் (ஆதி. 29:31-35) பத்து மாத இடை வெளிகளில் பிறந்தார்களென்றும் கருதுவோம். அவ் வாறு கருதும்போது நான்காம் பிள்ளை (யூதா) யாக்கோ பின் திருமணத்திற்கு 39 மாதங்களுக்குச் சற்று முன் பிறந்திருப்பார். பில்காளின் இரண்டு பிள்ளைகள் (ஆதி. 30:1-7) பத்து மாத இடைவெளியில் ஜெநிப்பிக்கப் பட்டிருந்தார்கள் என்று கருதுவோம். ஆனால் அவளு டைய முதல் குமாரனாகிய தாண் யூதா பிறப்பதற்கு எட்டு மாதங்களுக்கு முன் ஜெநிப்பிக்கப்பட்டார் என்று கருது வோம். இவ்வாறாகத் தாண் யூதா பிறந்ததற்கு ஒரு மாதத் திற்குப் பிறகு பிறந்திருப்பார். அவ்வாறு கருதும்போது பில்காளின் இரண்டாம் குமாரன் யாக்கோபின் திருமணத் திற்கு 50 மாதங்களுக்குப் பிறகு பிறந்திருப்பார்.

*34.* அடுத்தடுத்ததாக நான்குப் பிள்ளைகளைப் பெற்றிருந்த லேயாள், பில்காளின் இரண்டாம் குமார னாகிய நப்தலி ஜெநிப்பிக்கப்பட்டதை, அதற்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு கண்டு கொண்டாள் என்று எண்ணுவோம். தான் முன்புபோல கர்ப்பம் தரிக்கவில்லை என்று கண்டு, யாக்கோபுக்கு தன் வேலைக்காரியாகிய சில்பாளைக் கொடுத்தாள் (ஆதி.30:9,10). நப்தலி ஜெநிப் பிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு காத்தும், அதற்குப் பத்து மாதங்களுக்குப் பிறகு ஆசேரும் ஜெநிப் பிக்கப்பட்டிருப்பார்கள் (ஆதி. 30:12,13). இவ்வாறு கருதும்போது நப்தலி பிறந்த பன்னிரண்டு மாதங் களுக்குப் பிறகு, அதாவது யாக்கோபின் திருமணத்திற்கு 62 மாதங்களுக்குப் பிறகு ஆசேர் பிறந்திருப்பார்.

*35.* மேலும் ஆசேர் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு இசக்கார் ஜெநிப்பிக்கப்பட்டார் என்றும் (ஆதி. 30:17,18), அதற்குப் பத்து மாதங்களுக்குப் பிறகு செபுலோனும் (ஆதி. 30:19,20), அதற்கும் பத்து மாதங்களுக்குப் பிறகு தீனாலும் ஜெநிப்பிக்கப்பட்டாள் (ஆதி. 30:21) என்றும் கருதுவோம். அதின்படி யாக்கோ பின் திருமணத்திற்கு 83 மாதங்களுக்குப் பிறகு தீனாள் பிறந்திருப்பாள். இறுதியாக தீனாள் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு யோசேப்பு ஜெநிப்பிக்கப் பட்டார் என்று கருதும் போது யாக்கோபின் திருமணத் திற்கு 84 மாதங்களுக்குப் பிறகு, அதாவது ஏழு வருடங் களுக்குப் பிறகு யோசேப்பு பிறந்திருக்க வேண்டும். இது போதுமான கால இடைவெளிகளோடு, யாக்கோபின் திருமணத்திலிருந்து ஏழு வருடங்களுக்குள் பன்னிரண்டு பிள்ளைகளின் பிறப்பைக் காண்பிக்கிறது. வேதாகமத்தை இலக்கணமாகக் கருதி விமர்சிக்கிறவர்களின் பொய்யான வாதம் தவறென்று நிரூபிக்கிறது. வேதாகமத்தை இவ் வாறு விமர்சிக்கிறவர்கள் கொண்டு வரும் ஒவ்வொரு கருத்தையும் நாம் நிச்சயமாகத் தவறென்று நிரூபிக்கக் கூடும்.

## யாக்கோபுக்கும் லாபானுக்கும் இடையில் செய்யப்பட்ட கூடுதலான ஒப்பந்தம்

*36.* ஆதி. 30:25 ராகேல் யோசேப்பைப் பெற்ற பின், யாக்கோபு லாபானை நோக்கி: நான் என் ஸ்தானத் திற்கும் என் தேசத்திற்கும் போக என்னை அனுப் பிவிடும். ஆதி. 30:25-43 வரையுள்ள வசனங்களில் பதிவு செய்யப்பட்ட சம்பவங்களின் நிஜ நிறைவேறுதல்கள்,

இடைப்பட்ட காலத்தில் *1846* -ம் வருடத்திலும் அதற்குப் பிறகும் நிகழ்ந்தன. அக்காலத்தில் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள், அவர்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம், தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் முக்கியமான தலைவர்களுக்குப் பின்வரும் காரியத்தைத் தெரிவித்தார்கள் (யாக்கோபு லாபானை, நோக்கி): தேவனுடைய பெயரளவிலான ஜனங்கள் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களை இனி அவர்கள் மத்தியிலே தடுத்து நிறுத்தி வைக்காமல் அவ்விடத்தை விட்டு, அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்த சத்தியம் மற்றும் அதின் ஆவிக்கொத்த செயல் எல்லைக்குள் செல்ல அனுமதிக்க வேண்டும் (என் ஸ்தானத்திற்கும் என் தேசத்திற்கும் போக என்னை அனுப்பி விடும்).

*37. ஆதி. 30:26* நான் உமக்கு ஊழியஞ்செய்து சம்பாதித்த என் மனைவிகளையும் என் பிள்ளைகளையும் எனக்குத் தாரும்; நான் போவேன், நான் உம்மிடத்தில் சேவித்த சேவகத்தை நீர் அறிந்திருக்கிறீர் என்றான். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு), ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் உக்கிராணத்துவ சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் (மனைவிகள்) அவர்களோடு ஒத்துணர்வு கொள்பவர்களையும் (பிள்ளைகள்) தங்களோடு கொண்டு போக அனுமதிக்க வேண்டுமென்றும் இந்த தலைவர்களிடம் வேண்டிக் கொண்டார்கள் (நான்… சம்பாதித்த என் மனைவிகளையும் என் பிள்ளைகளையும் எனக்குத் தாரும்). ஏனென்றால் அவைகள் எல்லாவற்றிற்காகவும் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் பெயர் சபையின் இந்த தலைவர்களுக்கு முழு நிறைவான ஊழியஞ் செய்திருந்தார்கள் (நான் உமக்கு ஊழியஞ் செய்து சம்பாதித்த). அவைகளுக்காக இந்த ஊழியக்காரர்கள் செய்திருந்த ஊழியத்தின் தரத்தையும் அளவையும் இந்த தலைவர்கள் ஏற்கனவே நன்றாக அறிந்திருந்தார்கள் என்று கூறி (நான் உம்மிடத்தில் சேவித்த சேவகத்தை நீர் அறிந்திருக்கிறீர்), அவ்விடத்தை விட்டு போக அனுமதிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள் (நான் போவேன்).

*38. ஆதி. 30:27* அப்பொழுது லாபான்: உன் கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததேயானால் நீ இரு; உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று குறிப்பினால் அறிந்தேன். பெயர் சபையில் இந்த தலைவர்கள் (லாபான்) அதை விரும்பவில்லை. மாறாக இந்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) தங்களோடே தங்கியிருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள் (நீ இரு). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் அவர்களோடு இருந்ததினாலும், செய்த ஊழியத்தினாலும் தேவன் இந்த பெயர் சபையின் தலைவர்களை ஆசீர்வதித்தாரென்று அவர்கள் அனுபவத்தின் மூலம் கற்றுக் கொண்டதை ஒப்புக் கொண்டார்கள் (உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று குறிப்பினால் அறிந்தேன்). இந்த தலைவர்கள் இவ்வித ஊழியத்திலிருந்து பெற்றுக் கொண்ட அனுகூலங்களுக்காக, விசேஷமாக இம்மைக்குரிய அனுகூலங்களுக்காக (மற்ற காரியங்களுக்காக அல்ல) இவ்வாறு வேண்டுதல் செய்ய தூண்டப்பட்டார்கள் என்பது வெளிப்படையாக இருக்கிறது.

*39. ஆதி. 30:28-30* உன் சம்பளம் இன்னதென்று எனக்குச் சொல், நான் அதைத் தருவேன் என்றான். அதற்கு அவன்: நான் உம்மைச் சேவித்த விதமும், உம்முடைய மந்தை என்னிடத்தில் இருந்த விதமும் அறிந்திருக்கிறீர். நான் வருமுன்னே உமக்கு இருந்தது கொஞ்சம்; நான் வந்தபின் கர்த்தர் உம்மை ஆசீர்வதித்ததினால் அது மிகவும் பெருகியிருக்கிறது; இனி நான் என் குடும்பத்துக்குச் சம்பாத்தியம்பண்ணுவது எப்பொழுது என்றான். இருந்தாலும் இந்த தலைவர்கள் (லாபான்) தாராள குணமுள்ளவர்களைப் போல் வெளிப்படையாகத் தோற்றமளித்தார்கள். மேலும் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) செய்த ஊழியத்திற்காக எந்த அனுகூலங்களைப் பெற விரும்புகிறார்கள் என்றும், அவைகளைக் கொடுக்க தயாராக இருக்கிறார்கள் என்றும் இந்த தலைவர்கள் தங்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் சொன்னார்கள் (உன் சம்பளம் இன்னதென்று எனக்குச் சொல், நான் அதைத் தருவேன் ). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் இந்த தலைவர்களுக்கு எவ்வாறு ஊழியஞ் செய்தார்கள் என்பதையும், அதினால் இந்த தலைவர்களை ஆதரிக்கிறவர்களின் காரியம் எவ்வாறு இருந்ததென்றும் அவர்களே நன்றாக அறிவார்கள் என்று இந்த ஊழியக்காரர்கள் பதிலளித்தார்கள் (நான் உம்மை சேவித்த விதமும், உம்முடைய மந்தை என்னிடத்திலிருந்த விதமும் அறிந்திருக்கிறீர்). அதாவது இடைப்பட்ட காலத்தின் ஆரம்ப பகுதியில், நிஜ நிறைவேறுதலான யாக்கோபு வகுப்பார் அந்த தலைவர்களுக்கு ஊழியஞ் செய்ய தொடங்கின போது, அவர்களிடம் சில ஆதரவாளர்கள் மட்டுமே இருந்தார்கள் (நான் வரும் முன்னே உமக்கிருந்தது கொஞ்சம்). ஆனால் *1846* -ம் வருடத்திற்குள்ளும் அதற்குப் பிறகும் அவர்களுடைய ஆதரவாளர்கள் அதிக எண்ணிக்கையிலிருந்தார்கள் (அது மிகவும் பெருகி இருக்கிறது). இவ்வாறாக இந்த ஊழியக்காரர்கள் இந்த தலைவர்களோடிருந்த காலத்தில் தேவன் அந்த தலைவர்களை மிகுதியாக ஆசீர்வதித்திருந்தார் (நான் வந்த பின் கர்த்தர் உம்மை ஆசீர்வதித்ததினால்). இந்த ஊழியக்காரர்கள் தொடர்ந்து அந்த தலைவர்களுக்கே ஊழியஞ் செய்து கொண்டே இருந்தால், அவர்களுடைய சொந்த ஆவிக்குரிய குடும்பத்தாரை எப்போது பரிபாலிக்கக் கூடுமென்று கேட்டார்கள் (நான் என் குடும்பத்திற்குச் சம்பாத்தியம் பண்ணுவது எப்போது?).

*40. ஆதி. 30:31* அதற்கு அவன்: நான் உனக்கு என்ன தரவேண்டும் என்றான்; யாக்கோபு: நீர் எனக்கு ஒன்றும் தரவேண்டியதில்லை; நான் சொல்லுகிறபடி நீர் எனக்குச் செய்தால், உம்முடைய மந்தையைத் திரும்ப மேய்த்துக் காப்பேன். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) செய்யும் ஊழியத்திற்காகத் தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் இந்த தலைவர்கள் (லாபான்) அவர்களுக்கு என்ன அனுகூலங்களைக் கொடுக்க வேண்டுமென்று திரும்பக் கேட்டார்கள் (நான் உனக்கு என்ன தர வேண்டும்?) இந்த ஊழியக்காரர்கள் பாபிலோனிலுள்ள பெரிய பதவிகளையோ, அதிக வருமானத்தையோ மற்ற சலுகைகளையோ பெற்றுக் கொள்ள விரும்பாததால், இந்த தலைவர்கள் அவர்களுக்கு எதையும் தர வேண்டாம் என்று பதிலளித்தார்கள் (நீர் எனக்கு ஒன்றும் தர வேண்டியதில்லை; ஆதி. *14:21-24* வரையுள்ள வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்). ஆனால் இந்த தலைவர்கள் விரும்பினால் இந்த ஊழியக்காரர்கள் அந்த தலைவர்களின் ஆதரவாளர்களைத் தொடர்ந்து போஷித்து, அவர்களுக்கு ஊழியஞ் செய்வதற்காக (உம்முடைய மந்தையைத் திரும்ப மேய்த்து காப்பேன்), ஒரு ஆலோசனையை முன் வைத்தார்கள் (நான் சொல்லுகிற படி நீர் எனக்குச் செய்தால்).

*41. ஆதி. 30:32* நான் இன்றைக்குப்போய், உம

முடைய மந்தைகளையெல்லாம் பார்வையிட்டு, அவைகளில் புள்ளியும் வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளையும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும் பிரித்துவிடுகிறேன்; அப்படிப்பட்டவை இனி எனக்குச் சம்பளமாயிருக்கட்டும். பெயர் சபையின் தலைவர்களின் ஆதரவாளர்களின் வெவ்வேறான அளவிலும் வகையிலும் "பழைய வழக்கங்களிலிருந்து மாற்றத்தை விரும்புகிறவர்களாகக்" *(unorthodox)* கருதப்படுபவர்களை, அவர்களுடைய ஊழியத்தின் வெகுமதியாக அவர்களை பின்பற்றுபவர்களாக ஆக்கிக் கொள்வார்கள் என்ற ஆலோசனையை முன் வைத்தார்கள். அதாவது பழமைவாதிகள் இகழ்ச்சிக்குரியவர்களாகக் கருதுகிறவர்களைத் (கறுப்பான செம்மறியாடு) தங்களைப் பின்பற்றுபவர்களாக ஆக்கிக் கொள்ள தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) ஆலோசனையை முன் வைத்தார்கள். (கிழக்கத்திய நாடுகளில் பொதுவாகச் செம்மறியாடுகள் வெண்மையாக இருக்கும். சில செம்மறியாடுகள் மட்டுமே கருத்த நிறமுள்ளவைகளாகவும் பலவகையான நிறமுள்ளவைகளாகவும் இருக்கும். ஆனால் வெள்ளாடுகள் பொதுவாகக் கருத்த நிறமுடையவைகளாக இருக்கும். சில வெள்ளாடுகள் மட்டுமே பலவகையான நிறமுள்ளவைகளாக இருக்கும்; இவ்வாறாக ஒவ்வொன்றிலும் யாக்கோபு வழக்கத்திற்கு மீறிய விலங்குகளைக் கேட்டார், அவைகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது).

*42. ஆதி. 30:33,34* அப்படியே இனிமேல் என் சம்பளமாகிய இவற்றை நீர் பார்வையிடும்போது, என் நீதி விளங்கும்; புள்ளியும் வரியுமில்லாத வெள்ளாடுகளும், கறுப்பாக இல்லாத (ஆங்கில வேதாகமம் பார்க்கவும்) செம்மறியாடுகளும் என் வசத்தில் இருந்தால், அவையெல்லாம் என்னால் திருடிக்கொள்ளப்பட்டவைகளாய் எண்ணப்படட்டும் என்றான். அதற்கு லாபான்: நீ சொன்னபடியே ஆகட்டும் என்று சொல்லி, … "பழமைவாதிகளுக்கும்" "பழைய வழக்கங்களிலிருந்து மாற்றத்தை விரும்புகிறவர்களுக்கும் இடையில் இவ்வித ஒரு பிரிவை உண்டாக்கும்படி ஏற்பாடு செய்யும்போது, வருங்காலத்தில் ஆதரவாளர்களைப் பிரிக்க தேவைப்பட்டால் எவ்வித சந்தேகங்களும் எழும்பாது என்று தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) குறிப்பிட்டார்கள். அதாவது நிஜ நிறைவேறுதலான யாக்கோபிடமுள்ள "பழைய வழக்கங்களிலிருந்து மாற்றத்தை விரும்புகிறவர்களின்" மத்தியில் "பழமைவாதிகள்" யாரேனும் காணப்பட்டால், அந்த பழமைவாதிகள் அநீதியாக நிஜ நிறைவேறுதலான யாக்கோபினால் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் முன்வைத்த இந்த ஆலோசனையானது தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் முக்கியமான தலைவர்களுக்கு (லாபான்) மிகவும் அனுகூலமானதாகவும், பலன் தருவதாகவும் அவர்களுக்குத் தோன்றினதினால், அதை உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள் (நீ சொன்ன படியே ஆகட்டும்).

*43. ஆதி. 30:35,36* அந்நாளிலே கலப்பு நிறமும் வரியுமுள்ள வெள்ளாட்டுக் கடாக்களையும் (ஆண் ஆடுகள்), புள்ளியும் வரியுமுள்ள வெள்ளாடுகள் (பெண் ஆடுகள்) யாவையும், சற்று வெண்மையும் கருமையுமுள்ள செம்மறியாடுகள் யாவையும் பிரித்து, தன் குமாரரிடத்தில் ஒப்புவித்து, தனக்கும் யாக்கோபுக்கும் இடையிலே மூன்றுநாள் பிரயாண தூரத்தில் இருக்கும்படி வைத்தான். லாபானுடைய மற்ற ஆடுகளை யாக்கோபு மேய்த்தான். *1846* -ம் வருடத்தில் "எவாஞ்ஜெலிக்கல் அலையன்ஸ்" *(Evangelical Alliance)* என்ற கூட்டணி உருவாக்கப்பட்டது. நிஜ நிறைவேறுதலான லாபான் உட்பட, அதிலுள்ள அனைவரும் பின்வரும் கருத்தை முன்வைத்தார்கள்: ஒருவன் "பழமைவாதியாக" அல்லது "மதபற்றுடையவனாக" கருதப்பட விரும்பினால் "மனுஷ சாவாமை" என்ற தப்பறையிலும், மற்ற தப்பறைகளிலும் விசுவாசம் வைப்பது அவசியமானதாகும் *(P Vol 3 pg 119,120)*. இவ்வாறாக அந்த கூட்டணியின் கோட்பாடுகளுக்கும், மற்ற "பழமைவாத" கோட்பாடுகளுக்கும் இணங்காதவர்களை, நிஜ நிறைவேறுதலான லாபான் வகுப்பார், தங்களுடைய ஆதரவாளர்களிலிருந்து பிரித்து வைக்கப்பட்டு, இவர்களெல்லாம் "பழைய வழக்கங்களிலிருந்து மாற்றத்தை விரும்புகிறவர்களாக" கருதப்பட்டார்கள். அவர்களில் சிலர் உருவகமான பிள்ளைகளை ஜெநிப்பிப்பதிலும் பெற்றெடுப்பதிலும் ஈடுபட்டு கொண்டிருந்தார்கள் (பெண் ஆடுகள் – *1* கொரி. *4:15*, கலா. *4:19*). மேலும் நிஜ நிறைவேறுதலான லாபான் வகுப்பாரை உறுதியாக ஆதரவளிக்கிறவர்களின் கண்காணிப்பின்கீழ் அவர்களை வைத்தான் (தன் குமாரனிடத்தில் ஒப்புவித்து). இவ்வாறாக அவர்கள் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களிடமிருந்து (யாக்கோபு) தூரமாகப் பிரித்து வைக்கப்படும்படி செய்தார்கள் (தூரத்தில் இருக்கும்படி வைத்தான்). மேலும் பெயர் சபையின் இந்த தலைவர்கள், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களின் கண்காணிப்பின் கீழ் "பாதுகாப்பாக" (மாற்றத்தை விரும்பாமல்) இருப்பார்களென்று எவர்களைக் கருதினார்களோ, அவர்களுக்கு மட்டுமே ஊழியஞ் செய்யும்படி தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்குக் கட்டளையிட்டார்கள் (லாபானுடைய மற்ற ஆடுகளை யாக்கோபு மேய்த்தான்). இவ்வாறாக நிஜ நிறைவேறுதலான யாக்கோபு வகுப்பாரை ஆதரிக்கிற "பழைய வழக்கங்களிலிருந்து மாற்றத்தை விரும்புகிறவர்கள்" எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் வளராதபடிக்கு நிஜ நிறைவேறுதலான லாபான் வகுப்பார் தந்திரமாகச் செயல்பட்டார்கள். ஆனால் அவர் அதில் வெற்றி பெறவில்லை என்பதை நாம் பார்ப்போம்!

## யாக்கோபின் செழிப்பு

*44. ஆதி. 30:37* பின்பு யாக்கோபு பச்சையாயிருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொப்புகளை வெட்டி, இடையிடையே வெண்மை தோன்றும்படி, பட்டையை உரித்து,…தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) இது சம்பந்தப்பட்ட சில நடைமுறைகளையும், ஸ்தாபனங்களையும், ஏற்பாடுகளையும் கைக்கொண்டு, அவைகள் இனி பழமை இயல்புடையவைகளாகக் கருதப்படாதபடிக்கு, அவைகளில் மாற்றங்களை உண்டு பண்ணினார்கள். எடுத்துக்காட்டாக ரெவரண்ட் *(Reverend)* போன்ற பட்ட பெயர்களை விட்டுவிட்டு, மூப்பர் *(elder)* மற்றும் கண்காணி *(pastor)* போன்ற வேதாகம பெயர்களை உபயோகிக்கத் தொடங்கினார்கள். சபையில் ஒரு இடத்தை கொடுப்பதற்குப் பணம் வாங்குவதை விட்டு விட்டார்கள், சபைக்காக வற்புறுத்தி பணம் கேட்பது போன்றவைகளை விட்டுவிட்டு, முழு மனதோடு பணம் கொடுப்பவர்களிடமிருந்து மட்டுமே அதைச் சேகரிக்கத் தொடங்கினார்கள்.

*45. ஆதி. 30:38,39* தான் உரித்த கொப்புகளை ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் கால்வாய்களிலும் தொட்டிகளிலும் ஆடுகளுக்கு எதிராகப் போட்டுவைப்

பான்; ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது பொலிவதுண்டு. ஆடுகள் அந்தக் கொப்புகளுக்கு முன்பாகப் பொலிந்தபடியால், அவைகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டது. தேவனுடைய பெயரளவிலான ஜனங்கள் ஒன்றாகக் கூடி வந்து, அவர்கள் புரிந்து கொள்ளும் படிக்கு அவர்களுக்கு வேதாகம சத்தியங்கள் அறிவிக்கப்படும் போது (ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது), தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) "பழைய வழக்கங்களிலிருந்து மாற்றப்பட்ட" இந்த நடைமுறைகளையும் ஸ்தாபனங்களையும் ஏற்பாடுகளையும் அவர்களுக்கு முன் வைத்தார்கள் (தான் உரித்த கொப்புகளை… எதிராகப் போட்டு வைப்பான்). பெயரளவிலான தேவ ஜனங்கள் இவ்வாறு கூடி வரும்போது, உருவகமான பிள்ளைகளை ஜெநிப்பித்துக் கொண்டு அபிவிருத்தி செய்து கொண்டிருந்தார்கள் (ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது பொலிவதுண்டு). அதின் விளைவாக, இந்த ஊழியக்காரர்களின் கண்காணிப்பின் கீழுள்ள தேவனுடைய பெயரளவிலான ஜனங்கள் "பழைய வழக்கங்களை மாற்ற விரும்புகிற" பல புதிய விசுவாசிகளை உருவாக்கினார்கள் (கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும், வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டது).

*46. ஆதி. 30:40* அந்த ஆட்டுக்குட்டிகளை யாக்கோபு பிரித்துக்கொண்டு, ஆடுகளை லாபானுடைய மந்தையிலிருக்கும் கலப்பு நிறமானவைகளுக்கும் கறுப்பானவைகளெல்லாவற்றிற்கும் எதிராக நிறுத்தி, தன் ஆடுகளை லாபானுடைய மந்தையோடே சேர்க்காமல், தனிப்புறமாக வைத்துக்கொள்வான். நிஜ நிறைவேறுதலான யாக்கோபு வகுப்பார் இந்த "குழந்தைகளை" தேவனுடைய பெயரளவிலான ஜனங்களிலிருந்து பிரித்து வைத்தார்கள் (அந்த ஆட்டுக்குட்டிகளை…பிரித்துக் கொண்டு). மேலும் தேவனுடைய பெயரளவிலான ஜனங்கள் இந்த "பழைய வழக்கங்களை மாற்ற விரும்புகிறவர்களைக்" குறித்தும், அவர்களுடைய அதிக அறிவை குறித்தும், கிறிஸ்துவுக்குள் அவர்களுக்கிருக்கும் அதிக சுயாதீனத்தைக் குறித்தும் சிந்திக்கும் படிக்கு அவைகள் தொடர்ந்து அவர்களுக்கு முன்னிருக்கும் படி நிஜ நிறைவேறுதலான யாக்கோபு வகுப்பார் செய்தார்கள் (ஆடுகளை… எதிராக நிறுத்தி). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள், அவர்களுடைய ஆதரவாளர்களாகிய "பழைய வழக்கங்களை மாற்ற விரும்புகிறவர்களை", அதாவது சுத்திகரிக்கப்பட்ட வாசஸ்தல வகுப்பாரையும், அவர்களோடு இணைந்திருப்பவர்களையும் ஒரு பிரிக்கப்பட்ட நிலையில் வைத்தார்கள் (தனிப்புறமாக வைத்துக் கொள்வான்). அவர்கள் நிஜ நிறைவேறுதலான லாபானை ஆதரிக்கும் மதப்பிரிவுகளுக்குள் செல்லாதபடி காத்துக் கொண்டார்கள் (லாபானுடைய மந்தையோடே சேராமல்).

*47. ஆதி. 30:41,42* பலத்த ஆடுகள் பொலியும் போது, அந்தக் கொப்புகளுக்கு எதிரே பொலியும்படி யாக்கோபு அவைகளை அந்த ஆடுகளின் கண்களுக்கு முன்பாகக் கால்வாய்களிலே போட்டுவைப்பான். பலவீனமான ஆடுகள் பொலியும்போது, அவைகளைப் போடாமலிருப்பான்; இதனால் பலவீனமானவைகள் லாபானையும், பலமுள்ளவைகள் யாக்கோபையும் சேர்ந்தன. தேவனுடைய பெயரளவிலான ஜனங்களில் ஆவிக்குரிய ரீதியில் அதிக பலமுள்ளவர்களும், "பலமான ஆகாரத்தை மதித்துணர திறமையும் விருப்பமுள்ளவர்கள்" (பலத்த ஆடுகள்; எபி. 5:12-14), வேதாகம சத்தியங்களைக் குறித்து சிந்தித்துக் கொண்டு உருவகமான பிள்ளைகளை ஜெநிப்பித்துக் கொண்டு அபிவிருத்தி செய்து கொண்டிருக்கும் போது (பொலியும் போது), இந்த "பழைய வழக்கங்களிலிருந்து மாற்றப்பட்ட" நடைமுறைகளும் ஸ்தாபனங்களும் ஏற்பாடுகளும் அவர்களுக்கு முன் வைக்கப்படும் படிக்கு நிஜ நிறைவேறுதலான யாக்கோபு வகுப்பார் காரியங்களை அமைத்தார்கள் (அந்த கொப்புகளுக்கு எதிரே பொலியும்படி … ஆடுகளின் கண்களுக்கு முன்பாகக் கால்வாய்களிலே போட்டு வைப்பான்). ஆனால் தேவனுடைய பெயரளவிலான ஜனங்களில் அதிக பலமில்லாதவர்கள் (1 கொரி. 3:1, 2; 1 பேது. 2:3) கூடி வரும் போது (பலவீனமான ஆடுகள் பொலியும்போது), அல்லது ஆழமான சத்தியங்கள் அவர்களால் கருதப்படாத போது, நிஜ நிறைவேறுதலான யாக்கோபு வகுப்பார் அவ்வாறு செய்யவில்லை (அவைகளைப் போடாமலிருப்பான்). அதின் விளைவாகப் பெலவீனமானவர்கள் நிஜ நிறைவேறுதலான லாபான் வகுப்பாருடனும், பலமுள்ளவர்கள் நிஜ நிறைவேறுதலான யாக்கோபு வகுப்பாருடனும் இருந்தார்கள் (பலவீனமானவைகள் லாபானையும், பலமுள்ளவைகள் யாக்கோபையும் சேர்ந்தன).

*48. ஆதி. 30:43* இவ்விதமாய் அந்தப் புருஷன் மிகவும் விருத்தியடைந்து, திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவனானான். *1846 -ம் வருடத்திற்குப் பிறகு காலம் செல்ல செல்ல விசேஷமாக அறுவடை காலம் நெருங்கி வந்தபோது தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) அதிகமதிகமாகச் செழிப்படைந்தார்கள் (அந்த புருஷன் மிகவும் விருத்தியடைந்து). அவர்களிடம் பல ஆதரவாளர்களும் (திரளான ஆடுகளும்), குறைந்த திறமையுள்ள உதவியாளர்களும் (வேலைக்காரிகளும்), அதிக திறமையுள்ள உதவியாளர்களும் (வேலைக்காரரும்), ஸ்தாபனங்களும் (ஒட்டகங்களும்), போதனைகளும் (கழுதைகளும்), இருந்தன (உடையவனானான்). இந்த கூடுதலான சத்திய வெளிப்பாட்டிற்காகத் தேவனை போற்றி துதிப்போமாக!*

★★★★★★★★★★★★★★★★★★★★★

# வேதாகமத்தை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்

***BS# 399, June 1969, pp. 41-48***

*1.* **ப**ல ஜனங்கள் வேதாகமத்தைத் தங்கள் வீட்டில் வைத்திருப்பார்கள். சிலர் அதை ஞாயிறு அன்று சபை கூடுகைக்குக் கொண்டு போவார்கள். அநேகமாக, மற்றவர்கள் பார்ப்பதற்காக அதைச் செய்கிறார்கள். சிலர் வேதாகமத்தை, தீமையிலிருந்து தங்களைப் பாதுகாக்கும் தாயத்தாகக் கருதுகிறார்கள். ஆனால் வேதாகமத்தை வாசிப்பதற்காகவும், ஆராய்வதற்காகவும், அதை உண்மைத்துவத்துடனும் முற்சாய்வு இல்லாமலும் கவனமாகப் படிப்பதற்கும் அதிக நேரத்தை செலவிடுபவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

*2.* ஒருமுறை ஒரு பிரசங்கியாரைத் தன் வீட்டிற்கு அழைத்த ஒரு விவசாயின் காரியத்தை நினைவு கூருகிறோம். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், ஒரு கேள்வி எழும்பிற்று. அதற்கு அந்த பிரசங்கியார் வேதாகமத்திலிருந்து பதிலளித்தார். "அது வேதாகமத்திலிருக்கிறதா?" என்று அந்த விவசாயி ஆச்சரியத்துடன் கேட்டார். "ஆம் உங்கள் வேதாகமத்தைக் கொண்டு வாருங்கள், நான் அதை உங்களுக்குக் காண்பிப்பேன்"



என்று பிரசங்கியார் பதிலளித்தார். வரவேற்பறையிலுள்ள குடும்ப வேதாகமத்தைக் கொண்டு வர விவசாயி தன் பிள்ளையை அனுப்பினார். "எந்த புத்தகம் வேதாகமம்?" என்று அந்த சிறுவன் கேட்டான். "நான் மிக அதிகமாக உபயோகிக்கும் புத்தகம்" என்று தகப்பன் பதிலளித்தான். தபால் மூலமாகப் பொருட்களை வாங்குவதற்கு உபயோ கிக்கும் புத்தகத்தை அந்த சிறுவன் கொண்டு வந்தான்!

*3.* ஒரு சராசரி மனிதன் புரிந்துகொள்வதற்கு வேதாகமம் மிக ஆழமாகவும் கடினமாகவும் இருக்கிற தென்று பலர் சொல்கிறார்கள். வேதாகமத்தைப் படிப்பதில் சோம்பலாயிருப்பதற்கும் அல்லது அதைப் படிக்காமலிருப்பதற்கும் இதையே ஒரு காரணமாகக் கூறுகிறார்கள். மேலும் பல முரண்பாடான மதப்பிரிவு கோட்பாடுகள் இருப்பதினாலும், வேதாகமம் உண்மை யில் எதைப் போதிக்கிறது என்பது சம்பந்தமாகப் பல மதப்பிரிவுகளின் சபை தலைவர்களுக்கும், போதகர் களுக்கும், எழுத்தாளர்களுக்கும் இடையில் பல கருத்து வேறுபாடுகள் இருப்பதினாலும் சிலர் உற்சாகத்தை இழக்கிறார்கள். ஏனென்றால் மதரீதியான கல்விகளில் அதிகமாகப் பயிற்றுவிக்கப்பட்ட பல மத சாஸ்திரிகளே வேதாகமத்தைப் புரிந்துகொள்ள இயலாதவர்களாகவும், அதின் சரியான அர்த்தத்தை இணக்கமாகப் புரிந்து கொள்ள இயலாதவர்களாகவும் இருக்கும்போது, தாங் கள் அதைப் புரிந்துகொள்ள அதிக நம்பிக்கை இல்லை யென்று அவர்கள் சொல்கிறார்கள். மற்றவர்களோ தேவ வார்த்தையிலுள்ள அவருடைய ஞானத்தை அறிந்து கொள்ள அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் பல நேரங்களில் அலட்சிய போக் குடையவர்களாகவும், பூமிக்குரிய செல்வத்தையும் கனத்தையும் நாடுகிறவர்களாகவும், "தேவ பிரியரா யிராமல் சுகபோக பிரியராயும்" இருக்கிறார்கள் *(2தீமோ. 3:4).*

*4.*இருந்தாலும், எழுதப்பட்டிருக்கிற ஒரு வெளிப் பாட்டைப் புரிந்துகொள்ளும் திறமையைத் தம்முடைய மானிட சிருஷ்டிகளுக்குக் கொடுத்திருக்கிற சர்வ ஞானமும், பூரண நீதியும், பூரண அன்பும், சர்வ வல்லமை யுமுள்ள சிருஷ்டிகர், அந்த சிருஷ்டிகள் சம்பந்தமாக அவர் கொண்டிருக்கிற நோக்கங்கள் மற்றும் திட்டங் களைப் பற்றிய இவ்விதமான ஏதேனுமொரு வெளிப் பாட்டை நிச்சயமாகக் கொடுத்திருப்பார் என்று நாம் அங்கீகரிக்க வேண்டும். உலகத்திலுள்ள புத்தகங்களில் மிக பழமையான புத்தகமாகிய வேதாகமமே அந்த வெளிப்பாடாக இருக்கிறது. ஒருவன் போற்றித் துதிக்கும் பயபக்தியுடனும், மனத்தாழ்மையுடனும், உண்மையான ஆர்வத்துடனும் அவனுடைய மா உன்னத சிருஷ்டிகர் அவனுக்கு வெளிப்படுத்தினதைப் புரிந்துகொள்ள விரும் பினால், "பரத்திலிருந்து வருகிற ஞானத்தை" பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற மனநிலையுடையவனாயிருக்கிறான் *(யாக். 3:17).* "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச் சம் தரும்" *(சங். 119:130).* "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவரு மாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வள வாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன்" *(யாக். 1:5,6).* தேவனை உண்மையாக வாஞ்சித் துக் கதறுகிறதும் *(சங். 42:1, 2),* அவருடைய ஐக்கியத்தில் களி கூருகிறதுமான ஒரு ஆத்துமா *(1யோவா. 1:3),* அவரிடத்தில் கிட்டிச் சேருவதிலும் *(யாக்.4:8),* இடை விடாமல் அவரோடு ஐக்கியம் கொள்வதிலும் மகிழும். ஏனென்றால் "அவர் தம்முடைய ஜனங்களுக்கு … சமாதானம் கூறுவார்" *(சங். 85:8).*

*5.* ஆனால் தேவவார்த்தையின் சத்தியத்தை இக்காலத்தில் விசுவாச வீட்டார் மட்டுமே புரிந்து கொள்வார்கள். "விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லையே" *(2தெச.3:2).* "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந் திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" காலமும், "சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்வார் களென்று கர்த்தர் சொல்வதால், இனி ஒருவன் தன் அயலானை நோக்கி கர்த்தரை அறிந்து கொள் என்று போதிக்க அவசியமில்லாதிருக்கும்" காலமும் இன்னும் வரவில்லை *(ஏசா.11:9; எரே.31:34).* கடந்த பல நூற்றாண்டு களாகத் தேவன் விசுவாச வகுப்பாரைத் தேர்வு செய்து கொண்டிருக்கிறார். அதாவது வரவிருக்கும் யுகமாகிய மேசியாவின் யுகத்தில் மனுகுலத்தில் தெரிந்து கொள்ளப் படாதவர்களை மனந்திரும்பச் செய்வதற்காகவும் ஆசீர் வதிப்பதற்காகவும், ஆபிரகாமையும் அவருடைய வித்தை யும் *(கலா. 3:8,16,29)* தேவன் தேர்வு செய்து கொண்டிருக் கிறார். அந்த யுகம் வரும் வரை தேவன் அவருடைய ரகசியங்களாகிய அவருடைய நோக்கங்களையும் திட்டங் களையும் "(உலகரீதியான) ஞானிகளிடமிருந்தும் புத்தி சாலிகளிடமிருந்தும்" மறைத்து *(1கொரி. 3:19,20; 1:19),* பாலகருக்கு அவைகளை வெளிப்படுத்துகிறார் *(மத். 11:25).* "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற் கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக் கிறார்" *(யாக். 4:6; 1 பேது. 5:5).*

*6.* ஒருவன் தேவனிடத்தில் வந்து, அவரிடம் கற்றுக் கொள்ள விரும்பினால், அதற்கு விசுவாச மென்பது இன்றியமையாத அடிப்படை பண்பாகும் *(யாக். 1:5,6).* "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப் பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேரு கிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிற வர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" *(எபி. 11:6).* விசுவாசமென்ற இந்த அடிப்படை பண்பு ஒருவனிடம் இருக்கும்போதும்கூட, தேவ வார்த்தையைப் பற்றிய உண்மையான புரிந்துகொள்ளு தலைப் பெற்றுக்கொண்டு தக்கவைத்து கொள்வதற்கு, ஏழு மற்ற பண்புகளும் தேவையாயிருக்கின்றன. அவை களாவன: மனத்தாழ்மை *(மத். 11:25),* பணிவுநயம் *(சங். 25:9; ஏசா. 61:1),* போற்றித் துதிக்கும் பயபக்தி *(சங். 25:14),* நீதியின் மேல் பசிதாகம் *(மத். 5:6),* உண்மை மற்றும் நன்மை *(லூக். 8:15)* மற்றும் பரிசுத்தம் *(எபி. 12:14).*

*7.* நாம் தேவ வார்த்தையை ஆராய்வதென்பது விசுவாசத்தோடு செய்யப்படாவிட்டால் அது நமக்குப் பிரயோஜனமாக இருக்காது *(எபி.4:2).* மேலும் ஒருவ

னிடம் மேலே சொல்லப்பட்ட கூடுதலான பண்புகள் இல்லாவிட்டால் சத்தியத்தைப் பெற்றுக் கொண்டு தக்கவைத்துக் கொள்ள முடியாது: *(1)* மனத்தாழ்மை மிகவும் அவசியமானது, ஏனென்றால் அது *(a)* சுயத்தில் திருப்தி அடைவது, தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளக் கூடுமென்று எண்ணுவது, அகந்தை, தன் சொந்த கருத்துகளைச் சரி என எண்ணுவது ஆகிய உணர்வுகளில் வெளிப்படும் பெருமையை அகற்றி, *(b)* தன் சொந்த குறைபாடுகளையும், தேவனும் கிறிஸ்துவும் பரத்திலிருந்து வருகிற ஞானமும் தனக்குத் தேவை என்பதையும் அங்கீகரிக்கிற சரியான, தாழ்மையான சுயமதிப்புடையவனாக அவனை ஆக்கும். *(2)* பணிவு நயம் மிக அவசியமானது, ஏனென்றால் ஒருவனைத் தேவ வார்த்தையிலுள்ள போதனைகளைக் கருத்தில் கொள்ள ஆயத்தமுள்ளவனாகவும், அவைகளுக்குப் பிரதிகிரியை செய்கிறவனாகவும் ஆக்குகிற கற்பிக்கப்படக் கூடிய தன்மையையும், வழி நடத்தப்படக்கூடிய தன்மையையும் அவனுடைய மனதிற்கும், பணிந்து கொள்ளும் தன்மையை அவனுடைய இருதயத்திற்கும் அளிக்கும். *(3)* போற்றித் துதிக்கும் பயபக்தி இன்றியமையாத ஒன்றாகும். ஏனென்றால் "கர்த்தருக்குப் பயப்படுதலே (போற்றித் துதிக்கும் பயபக்தியே) ஞானத்தின் ஆரம்பமும்…. அறிவின் ஆரம்பமுமாகும்" *(சங் 111:10; நீதி 1:7- knowledge KJV)*. தேவனிடத்தில் போற்றித் துதிக்கும் பயபக்தியுள்ளவர்களுக்கு மட்டுமே அவர் தம்முடைய ரகசியங்களை வெளிப்படுத்துவார் *(சங் 25:14)*.

*8. (4)* சத்தியம் மற்றும் நீதியின் மேல் பசிதாகம், அதாவது அவைகளின் மேல் ஆர்வமான ஆவல் மிகவும் அவசியமானதாகும். ஏனென்றால் சத்தியம் மற்றும் அதின் ஆவியை அடையும் பாதையிலுள்ள இடையூறுகளை மேற்கொள்ளும் அளவிற்கு அவைகளின் மேல் அவனை அதிக அன்பு கூர செய்யும் *(5)* இருதயம் மற்றும் மனதின் உண்மையும் அவசியமானதாகும். ஏனென்றால் அது தேவ வார்த்தையின் போதனைகளை உண்மையானவைகளென்று ஏற்றுக் கொள்ளும். உண்மை இல்லாத இருதயம் இயல்பாகவே சத்தியத்தை எதிர்க்கும். ஆனால் உண்மையான இருதயம் சத்தியத்தை நேசிக்கும். *(6)* நற்குணமுள்ள இருதயமும் அவசியமானது. ஏனென்றால் ஒரு காரியம் அதற்கொத்த இயல்புடையவைகளின் கவனத்தை ஈர்க்கும். நன்மையான ஒரு இருதயம் நன்மையை நோக்கி ஈர்க்கப்படும். சத்தியமென்பது தேவனுடைய நற்குணத்தின் வெளிப்பாடாயிருப்பதால், நன்மையான இருதயம் இயல்பாகவே அதை மதித்துணரும். *(7)* பரிசுத்தம் மிகவும் அவசியமானதாகும். ஏனென்றால் பரிசுத்தமென்பது பொதுவான மற்றும் சாதாரணமானவைகளிலிருந்து பிரிக்கப்பட்டு, சத்தியத்திற்கும் நீதிக்கும் அர்ப்பணிக்கப்படுவதை அர்த்தப்படுத்தும்.

*9.* வேதாகமத்தைப் படிப்பதற்கு தேவன் அங்கீகரிக்கிற முறையிலிருந்து அவர் திட்டமிட்ட ஆசீர்வாதத்தை ஒருவன் பெற்றுக் கொள்ள விரும்பினால், இருதயம் மற்றும் மனதின் இந்த பண்புகள் மிகவும் அவசியமானவைகள். மேலும் ஆரம்பத்தில் சத்தியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டுமல்ல, காலத்திற்கேற்ற சத்தியத்தைப் படிப்படியாகப் பெற்றுக் கொள்வதற்கும், அதைப் பெற்றுக் கொண்ட பிறகும் அதைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் இந்த பண்புகள் அவசியமானவைகள். வேதாகமத்தில் சொல்லப்பட்ட இந்த பண்புகளின் அடிப்படையில் நாம் கேட்கும் போது நமக்குக் கொடுக்கப்படும் என்றும், நாம் தேடும்போது நாம் கண்டடைவோம் என்றும், நாம் தட்டும்போது நமக்குத் திறக்கப்படும் என்றும் நம்முடைய கர்த்தர் அவருடைய மலை பிரசங்கத்தில் நமக்கு உறுதியளிக்கிறார் *(மத். 7:7)* மேலும் இப்போது, விசுவாச யுகமாகிய சுவிசேஷ யுகத்தின் இறுதியில், பெயர் சபையின் இறுதியான லவோதிக்கேயா காலகட்டத்தில் (இப்போது கர்த்தர் இந்த பெயர் சபையின் அமைப்பைப் புறக்கணித்து தமது வாயினின்று வாந்தி பண்ணி இருக்கிறார் – *வெளி. 3:14-16)* கர்த்தர் சொல்லுகிறதாவது: இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான் *(வெளி. 3:20)"*. ஆகையால் நாம் நம்முடைய மனம் மற்றும் இருதயத்தின் கதவை அகலத்திறந்து, அவர் நம்மோடும் நாம் அவரோடும் போஜனம் பண்ணும்படி அவரை உள்ளே வர அழைப்போமாக.

## தேவனுடைய திட்டம் ஒழுங்கானதாகவும், பகுத்தறிவுக்கு இணக்கமானதாகவும் நடைமுறைபடுத்தக்கூடியதாகவும் இருக்கிறது

*10.* தேவ வார்த்தையை ஆராய்ந்து படிக்க, நாம் போற்றித் துதிக்கும் பயபக்தியோடு அதை அணுகும் போது, அதின் மூலக்காரணர் ஒழுக்கத்தின் தேவனாயிருக்கிறார் என்பதை அங்கீகரிக்க வேண்டும். வேதாகமத்தை நேசிக்கிற அநேகர், அதைச் சத்தியமென்னும் ஒழுங்குமுறையான அமைப்பைக் கொண்ட ஒரு புத்தகமென்று கருதுவதற்குப் பதிலாக, சரியான வரிசையில் ஒழுங்காக அமைக்க முடியாத உண்மைகள், கற்பனைகள், கட்டளைகள் மற்றும் வாக்குத்தத்தங்களின் ஒரு தொகுப்பாகக் கருதுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் உறுதியற்றவர்களாகவும் கருத்துகளை அடிக்கடி மாற்றிக் கொள்கிறவர்களாகவும் தப்பறையாளர்களுக்கும் அவிசுவாசிகளுக்கும் எளிதில் வசப்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

*11.* நாம் தேவனைக் குறித்து அறிகிற எல்லா காரியங்களும், ஒவ்வொரு அம்சத்திலும் அவர் பகுத்தறிவுக்கு இணக்கமாகவும், நடைமுறைக்கு இணக்கமான முறையிலும், ஒழுங்காகவும் செயல்படுகிறவராக அவரை நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவனுடைய சிருஷ்டிப்பின் மேன்மையான வேலையில், "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்மையாக இருந்தது" என்று நாம் காண்கிறோம் *(ஆதி. 1:31)*. அதுபோலவே ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததியின் இரட்சிப்புக்காகத் தேவன் செய்த மாஉன்னத திட்டத்திலும் கூட, அந்த திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்காகச் சகலமும் பூரணமாகவும், ஒழுங்கான வரிசையிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் தேவ வார்த்தையைக் குறித்து அவர் தாமே அறிவிக்கிறதாவது: "என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" *(ஏசா. 55:11)*.

*12.* வேதாகமத்தை விசுவாசியாத ஒருவன், அவனுடைய "இயற்கை என்னும் தேவனை" பிரமாணங்கள் மற்றும் ஒழுங்கை உள்ளடக்கிய ஒன்றாகக் காண்கிறான். வானியல், புவிஅமைப்பியல், உயிரியல், வேதியியல் மற்றும் மற்ற அறிவியல்கள் ஆகியவைகளில்

அவன் ஒழுங்கமைப்பைக் காண்கிறான். ஆனால் அவன் வேதாகமத்தில் குழப்பத்தை மட்டுமே காண்கிறான். தேவனுடைய கிரியைகள் ஒழுங்கு முறையாகவும் இசைவிணக்கமாகவும் இருக்க வேண்டுமென்று அவன் சரியாக நிதானிக்கிறான். அந்த அறிவியல்களிலுள்ள அடிப்படை கொள்கைகளை அவன் அறிகிறான். ஆகையால் இயற்கை என்னும் புத்தகத்தைப் புரிந்துகொள்ளக் கூடியவனாக இருக்கிறான். ஆனால் வேதாகமத்திலுள்ள திட்டத்தை மிக குறைவாகவே அறிகிறான், அல்லது முற்றிலும் அறியாமலிருக்கிறான். ஆகையால் அதைப் புரிந்து கொள்ளவோ மதித்துணரவோ முடியாதிருப்பதால் அதைப் புறக்கணிக்கிறான். வேதாகமத்தைப் புரிந்து கொள்ள இயலாததால் அதைப் புறக்கணிக்க அவனுக்கு உரிமை இருப்பதைப் போலவே, வானியியலைப் போன்ற மற்ற அறிவியல்களையும் புரிந்துகொள்ள இயலாதவனுக்கு, அவைகளைப் புறக்கணிக்கவும் அதே உரிமை இருக்கிறது.

*13.* புரிந்துகொள்ளப்படாததால் குழப்பமாயிருக்கிற ஒரு காரியமானது, விளக்கப்படும்போது அழகானதாகவும் இசைவிணக்கமானதாகவும் ஆகும். பூரண அறிவை அடையும் வரை, வெளிச்சத்தின் ஒவ்வொரு கதிரும் முற்காலத்தில் வைத்திருந்த கருத்துகளை ஓரளவிற்காவது சரிசெய்து மாற்றியமைக்கும். எந்த ஒரு அறிவியலையோ புத்தகத்தையோ புரிந்துகொள்வதற்கு, அது அதின் விளக்கத்திற்குரிய கொள்கைகளுக்கு இணக்கமாகப் படித்தாரயப்பட வேண்டும். "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராது" *no prophecy of the scripture is of any private interpretation KJV 2* பேது. *1:20 -* வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனத்தையும் விளக்குவது தனி நபருக்குரியதான ஒன்றல்ல). ஆதியாகமம் புத்தகத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷ புத்தகம் வரையிலுள்ள தேவ வார்த்தையானது *(2 தீமோ. 3:16)*, ஒரே ஒருவருடைய ஆவியினால் *(தேவனுடைய பரிசுத்த ஆவி - 2பேது. 1:21; 1கொரி. 2:10-14)* பதிவு செய்யப்பட்டிருப்பதாலும், அதே ஒருவருடைய ஆவியின் உதவியினால் சரியாக விளக்கப்படுவதினாலும், வேதாகமமானது முழுமையான ஒரே புத்தகமாகக் கருதப்பட வேண்டும். எவ்வித தொடர்புமில்லாத பல புத்தகங்களாகக் கருதப்பட்டால், அது இசைவின்மையை உருவாக்கும். நாம் ஒரு வேத வசனத்தை மற்றொரு வேத வசனத்தோடு ஒப்பிட்டு, வேதாகமம் இசைவிணக்கமாகக் கொடுக்கும் சாட்சியைக் கருதும்போது, தேவன் தாமே தம்முடைய சொந்த காரியங்களை விளக்குபவராகவும் இருக்கிறார் என்றும், அவர் தாமே அதைத் தெளிவுப்படுத்துவார் என்றும், அதிகமதிகமாகக் கற்றுக் கொள்வோம்.

*14.* தேவனுடைய ஜனங்களுக்குரிய வெளிப்பாடாக எழுதப்பட்டிருக்கிற அற்புதமான புத்தகங்களின் ஒரு தொகுப்பைத் *(வேதாகமத்தின் 66 புத்தகங்கள்)* தேவன் நமக்குக் கொடுத்திருந்தாலும், அவருடைய ஜனங்கள் அதைப் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு அதைத் தெளிவற்றதாகவும் கடினமாகவும் ஆக்குவார் என்று எண்ணுவது நியாயமான ஒன்றல்ல. தேவன் உருவாக்குகிற சகலமும் ஒரு நோக்கத்தோடு உருவாக்கப்படுகிறது. தேவனுடைய உண்மையான மற்றும் உண்மைத்துவமுள்ள ஜனங்கள் அவருடைய ஆவியின் உதவியோடு புரிந்துகொள்ள முடியாத அளவிற்குத் தேவன் அவருடைய செய்தியைத் தெளிவற்றதாக ஆக்கினால், வேதாகமத்தைக் கொடுப்பதில் அவர் கொண்டிருந்த நோக்கம் நிச்சயமாகத் தோல்வியடையும்!

*15.* *"மாயமான விசுவாச பிரமாணங்கள்" (Mystical beliefs)* எனப்படுகிற குழப்பமான கருத்துகளினால் பலர் பெரிதும் இடறலடைந்து குழம்பிப் போகிறார்கள். மற்றவர்களைக் கவருவதற்காக தோற்றுவிக்கப்பட்ட இந்த பிரமாணங்கள் எவ்வித பயனுமில்லாத புரிந்து கொள்ள முடியாத மதபோதனைகளை உருவாக்குகின்றன. அற்புதமான ஒரு காரியம் விளக்கப்பட முடியாத ஒன்றாக இருக்க வேண்டும் என்ற பிரபலமான யூகத்தினால் பலர் வஞ்சிக்கப்படுகிறார்கள். இவ்வாறாகத் தேவனுடைய இருத்தலின் தன்மை, தேவனுடைய குணாம்சம், கிறிஸ்துவின் தன்மை, கிறிஸ்து மாம்சமாகுதல், கிறிஸ்துவின் மீட்கும் பலி, பரிசுத்த ஆவி, மரணத்தின் தன்மை, வேதாகமத்தில் சொல்லப்பட்ட நரகம், உயிர்த்தெழுதல், ஆத்துமா மற்றும் ஆவி, மில்லினிய யுகம், பரதீஸ், புதிய பூமி முதலிய கருத்துகள் சம்பந்தமாக, இருண்ட யுகங்களின் மதப்பிரிவு கோட்பாடுகளிலிருந்து பாரம்பரியமாகப் பெற்றுக் கொண்ட, அதிகமாகவோ குறைவாகவோ புரிந்துகொள்ள முடியாத மற்றும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத தவறான கருத்துகளைப் பலர் பிடிவாதமாக பற்றிக் கொள்கிறார்கள்.

*16.* தேவ வார்த்தையைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு *(1)* நாம் சுயத்திலிருந்து நம்மை வெறுமையாக்கிக் கொள்ள வேண்டும், *(2)* தேவ வார்த்தைக்கு முரண்பாடாயிருக்கிற மதப்பிரிவு நம்பிக்கைகளையும், நம்முடைய மனதில் ஏற்கனவே கொண்டிருக்கிற கருத்துகளையும், தள்ளி வைக்குமளவிற்கு மனத்தாழ்மையும் பணிவு நயமுமுள்ளவர்களாயிருக்க வேண்டும், *(3)* மனிதர்களுடைய முரண்பாடான போதனைகளை உயர்வாக மதிப்பதற்குப் பதிலாகத் தேவ வார்த்தையினிடத்தில் பயபக்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும், *(4)* சத்தியத்தைக் குறித்து அக்கறையற்றவர்களாக இல்லாமல், சத்தியத்தின் மேல் உண்மையான ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும், *(5)* மூடநம்பிக்கையுள்ளவர்களாக இல்லாமல் விசுவாசத்தை அப்பியாசிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் தேவனிடத்தில் தகுந்த பணிவு நயமுள்ளவர்களாக இருந்து, அவரிடமிருந்து கற்றுக் கொள்வதை ஆர்வமாக விரும்பாவிட்டால், அவர் நமக்குப் போதிக்க முடியாது. நாம் பூமிக்குரிய தலைவர்களையும் அவர்களுடைய போதனைகளையும் பாரபட்சத்தோடு பற்றிக் கொள்ளக் கூடாது. மேலும் வேதாகமத்தின் உண்மையான போதனைகளுக்கு எதிராக எவ்வித முற்சாய்வு தப்பெண்ணமும் இல்லாதிருக்க வேண்டும். நாம் வேதாகமத்தின் சில போதனைகளை மட்டுமே ஏற்றுக் கொண்டு மற்றவைகளைப் புறக்கணிக்கிறவர்களாக இருக்கக் கூடாது. நமக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் வசனங்களை மட்டுமே நாம் பற்றிக் கொள்ளக் கூடாது. நம்முடைய மதப்பிரிவு, விசுவாச பிரமாணங்களை எதிர்க்கும் வேத வசனங்களைக் கருத்தில் கொள்ளாமல், அவைகளை ஆதரிக்கும் வசனங்களை மட்டுமே நாம் உபயோகிக்கக் கூடாது. மற்றவர்கள் நமக்குப் போதித்த கருத்துகளுக்கும், கடந்த காலத்தில் நாம் விசுவாசித்த கருத்துகளுக்கும், அல்லது நாம் விசுவாசிக்க விரும்புகிற கருத்துகளுக்கும் தேவ வார்த்தையின் சில பகுதிகள் இணக்கமாக இல்லாத போதிலும், அந்த வார்த்தையின் முழுமையான சாட்சியை ஏற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களாயிராவிட்டால், நாம் தேவனிடத்தில் கற்றுக் கொள்ள அவரிடத்திற்கு வர ஆயத்தமுள்ளவர்களாக இருக்க மாட்டோம்.

## முழு தேவ வார்த்தையும் அவசியமானது

*17.* வேதாகமத்தைப் பகுதி பகுதியாகயும் அரைகுறையாகவும் விளக்குவதின் காரணமாக, கிறிஸ்தவர்களின் மத்தியில் அதிக குழப்பம் உண்டாகி இருக்கிறது. "வேதாகமம் ஒரு பழைய இசைக்கருவிக் கொப்பானது, எந்த இசையையும் அதில் வாசிக்கக் கூடும்" என்ற தவறான பழமொழிக்கு இதுவே காரணமாயிருக்கிறது. மிக சிலர் மட்டுமே வேதாகமத்தின் அதிக பகுதிகளை உபயோகிக்கிறார்கள். பெரும்பான்மையோர் நடைமுறைக்குரிய சில கற்பனைகளையும், ஏதேனுமொரு விசுவாச பிரமாணத்தை நிரூபிப்பதற்குத் தேவையான கோட்பாட்டையும் மட்டுமே மதித்துணருகிறார்கள். ஒரு சிறிய புத்தகம் மட்டுமே முற்றிலும் போதுமானதாக இருக்குமென்று அவர்கள் எண்ணுவதால், இவ்வளவு ஒரு பெரிய புத்தகத்தைக் கொடுத்ததற்காகத் தேவனையே குறை கூறுகிறார்கள்.

*18.* ஒரு பிரசங்கியார் ரோம. *4:4*-ம் வசனத்திலுள்ள "கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி" என்ற வார்த்தைகளை மட்டுமே எடுத்துக் கொண்டு, நியாயமாகுதல் விசுவாசத்தினால் அல்லாமல் கிரியைகளினால் வருகிறதென்ற கருத்தை முன்வைத்தார். அந்த வசனத்தின் சூழ்நிலை அமைப்பைக் கவனிக்கிற அனைவருக்கும் இது எவ்வளவு தவறான பிரயோகமென்பது வெளிப்படையாயிருக்கும். ஒரு வசனத்தின் சூழ்நிலை அமைப்பை கருத்தில் கொள்ளாமல் அந்த வசனத்தை உபயோகிக்காதபடிக்குக் கவனமாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் அதைத் தவறாக உபயோகிப்போம். ஒரு வசனம் அதின் சூழ்நிலை அமைப்புக்கு இணக்கமாகவும், அந்த விஷயத்தைக் குறித்துச் சொல்கிற மற்ற எல்லா வேத வசனங்களுக்கும் இணக்கமாகவும் புரிந்து கொள்ளப்படாவிட்டால், அதை ஒரு கோட்பாட்டின் நிரூபணமாக உபயோகித்தால் அதற்கு அதிக மதிப்பில்லை. நாம் "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதித்து" *(2தீமோ. 2:15)*, ஒவ்வொரு வசனத்திற்கும் யுகங்களைப் பற்றிய தேவனுடைய மேன்மையான திட்டத்தில் அதற்குரிய சரியான காலத்தையும் இடத்தையும் அளிக்காவிட்டால், அந்த வசனத்திற்கு அதிக மதிப்பில்லை. கால்வினிஸ்ட்டுகள், ஆர்மினியர்கள், யூனிவர்சலிஸ்ட்டுகள் ஒவ்வொருவரும் அவர்களுடைய கோட்பாட்டை ஆதரிப்பதாகத் தோன்றும் ஒன்று அல்லது பல வசனங்களை எளிதாகக் கண்டு கொள்ளக் கூடும். தேவ நம்பிக்கையற்ற ஒருவன், இவைகள் மூன்றும் ஒன்று மற்றொன்றுக்கு முரண்பாடாயிருக்கிறது என்று சொல்லுவான்.

*19.* இவ்வாறாக கால்வினிஸ்ட் *(Calvinist)* கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன், ஒரு நபர் இரட்சிப்படைவானா அல்லது நித்திய ஆக்கினைக்கு உட்படுத்தப்படுவானா என்பது முன்பே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்ற அவனுடைய கோட்பாட்டுக்கு ஆதரவாக ரோம. *8:28-30;* எபே. *1:6* ஆகிய வசனங்களையும், "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" *(யோவா. 6:44)* என்று யெஷுஆ தாமே சொன்ன வார்த்தைகளையும் உபயோகிப்பான். இதற்கெதிர் மாறாக ஆர்மினியன் *(Arminian)* கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன், எல்லாருக்கும் இரட்சிப்பு இலவசமாகக் கிடைக்கும் என்ற கருத்தை பற்றிக் கொண்டு, "விருப்பமுள்ளவன்" வந்து "ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக் கடவன்" *(வெளி. 22:17)* என்ற வசனத்தையும், "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" *(யோவா. 12:32)* என்று யெஷுஆ தாமே சொன்ன வசனத்தையும் வலியுறுத்துவான். இந்த இரு வகுப்பாரும் இந்த கருத்து சம்பந்தமாக முரண்பாடாயிருந்தாலும், இந்த வாழ்க்கையில் விசுவாசிக்கிறவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் என்றும், மற்ற அனைவரும் நித்தியத்திற்கும் எந்த நம்பிக்கையுமில்லாமல் ஒழிந்து போவார்கள் என்றும் சொல்கிறார்கள் (அறியாமையின் காரணமாகத் தேவன் பலரை மன்னிக்கிறார் என்று ஆர்மினியன் கூட்டத்தார் அடிக்கடி சொல்லுவார்கள்). யூனிவர்சலிஸ்ட் *(Universalist)* கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் வந்து, எபி. *2:9;* *1தீமோ. 2:4-6; 4:10* முதலிய வசனங்களை எடுத்துக் கொண்டு, யெஷுஆ "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்" என்றும் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட" தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்றும், தேவன் "எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கு இரட்சகராக" இருக்கிறார் என்றும் சொல்கிறான். ஒவ்வொருவனும் அவனுடைய சொந்த மதபிரிவின் கோட்பாட்டைப் பற்றிக் கொண்டு, அதற்கு ஆதரவாக அவன் தேர்வு செய்கிற, அவனுக்குப் பிடித்த சில வசனங்களை மட்டுமே உபயோகிக்கிறான். ஒவ்வொருவனும் மற்றவர்கள் சொல்கிற வசனங்களை அசட்டை செய்கிறான், அல்லது அவைகளைக் கருத்தில் கொள்ளாதிருக்கிறான். ஒவ்வொருவனும் அவனுடைய சொந்த கோட்பாட்டை நிலை நாட்ட நாடுகிறான். அதை வேதாகம சாட்சியோடு இசைவுப்படுத்த முடியாத போதிலும் அதைக் குறித்துக் கவலைப்படுவதில்லை.

*20.* வேதாகமம் உண்மையானது. ஆகையால் இந்த வசனங்கள் எல்லாவற்றையும் இசைவிணக்க மாக்குவதற்கும், தேவ வார்த்தையின் மற்றெல்லா வசனங்களோடும் அவைகளை இசைவிணக்கமாக்குவதற்கும், எந்த ஒரு வசனத்தை அசட்டை செய்யவோ கருத்தில் கொள்ளாமல் இருக்கவோ, முக்கியத்துவமில்லாததாகக் கருதவோ கூடாதபடிக்கும், ஏதேனுமொரு ஒரு வழி இருக்க வேண்டும். நிச்சயமாகத் தேவன் தமக்குத் தாமே முரண்பாடு உள்ளவராக இருக்க மாட்டார். ஆகையால் அவருடைய வார்த்தையிலுள்ள ஒரு வசனம் மற்றொன்றுக்கு முரண்பாடாயிருப்பதாக நமக்குத் தோன்றினால், தவறு நம்முடையது, தேவனுடையது அல்ல. தேவன் ஒரே நோக்கமுடையவராயிருக்கிறார். மேலும் அதை நிறைவேற்றுவதற்கு ஒரே திட்டமுடையவராயிருக்கிறார். ஆகையால் தேவன் "கிறிஸ்து யெஷுஆவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தை *(கிரேக்க வார்த்தையின்படி "யுகங்களைப் பற்றிய ஏற்பாட்டை" – Plan of the Ages – Rotherham, Diaglott)* (எபே. *3:11)* நாம் புரிந்து கொள்ளாவிட்டால், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவர்களாக இருக்க முடியாது. ஆகையால் பல்வேறு வசனங்களை அவைகளுக்குரிய யுகங்கள், சகாப்தங்கள் மற்றும் காலங்களுக்கு ஏற்ப பிரயோகிக்க தவறுவோம்.

*21.* தேவனுடைய ஜனங்கள் யுகங்களைப் பற்றிய அவருடைய திட்டத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று ஆர்வமாக விரும்பும் போது, நமக்கு எவ்வித உதவியும் அளிக்காமல் இருளில் தடுமாற நம்மை விட்டு விட மாட்டார். "நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கப் பூரணபுருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவி

சேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீர மாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், … நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்” இருப்பதற்குத் தேவன் பன்னி ரண்டு அப்போஸ்தலர்களையும் ஸ்விங்லி, லூத்தர், வெஸ்லி *(Zwingli, Luther, Wesley)* போன்ற பொது தீர்க்கதரிசிகள் அல்லது போதகர்களையும், சுவிசேஷகர் களையும், தனி எக்லீஷியாக்களின் மேய்ப்பர்களையும், போதகர்களையும் நமக்குத் தயவாய் கொடுத்திருக்கிறார் *(எபே. 4:11-14)*. இவ்வாறாக ஒவ்வொருவனும் தனித்தனி யாக, பல்வேறு கருத்துக்களுடன் வேதாகமத்தை ஆராய் ந்து கோட்பாடுகளை எடுத்துக் கொள்ள நாம் விட்டு விடப்படவில்லை. தேவ ஜனங்களை பொதுவாகவும் தனி எக்லீஷியாக்களாகவும் மேய்ப்பதற்குத் தேவன் “கண் காணிகளாகச்” சத்திய ஊழியக்காரர்களை ஏற்பாடு செய்திருக்கிறார் *(அப். 20:17-31)*.

## வேதாகமம் அநேக பாடங்களைக் கொண்ட ஒரு புத்தகம்

*22.* கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட முறையில் படிக் கும் போதும், பொதுகூட்டங்களில் படிக்கும் போதும் வேதாகமத்தை ஒரு பாட புத்தகமாக உபயோகித்து, அவ்வித ஆய்விலிருந்து சத்தியத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று பொதுவாக எண்ணுகிறார்கள். ஆகை யால் அவர்கள் வேதாகமத்தை வெவ்வேறு இடங்களில் அநேக பாடங்களைக் கொண்ட ஒரு புத்தகமாகக் *(Book of Texts)* கருதாமல், ஒரே பாட புத்தகமாகக் *(Textbook)* கருதுகிறார்கள். வேதாகமம் நிச்சயமாக ஒரு பாட புத்தகம் அல்ல. ஆகையால் அதை அவ்வாறு கருதிப் படிக்கக் கூடாது. நாம் சற்று சிந்தித்துப் பார்த்தால் அதை எளிதாக புரிந்துகொள்வோம். ஒரு பாட புத்தகமென்பது ஏதேனு மொரு கல்வித்துறையைப் பற்றிய பகுத்தறிவுக்கு இணக்கமாகப், படிப்படியாக ஒழுங்காக எழுதப்பட்ட ஒரு ஆராய்வு கட்டுரையாகும். ஒரு நல்ல கணித புத்தகம் இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டாகும். ஏனென்றால் அதிலுள்ள பாடங்கள் பகுத்தறிவுக்கு இணக்கமாகவும், ஒரு கருத்துப் பொருளைப் பற்றிய பாடங்கள் ஒரே இடத்தில் கொடுக்கப்பட்டு, ஒழுங்கு முறையாகவும், படிப்படியாகவும், முழுமையாகவும் ஆராயப்படும். ஒவ் வொரு கருத்துப் பொருளும் தனிப்பட்ட முறையில், மற்ற கருத்துப் பொருள்களிலிருந்து வேறுபடுத்திக் கொடுக்கப் படும். எளிமையான கருத்துப் பொருள்களில் தொடங்கி படிப்படியாகக் கடினமான கருத்துப் பொருள்களுக்குச் செல்லும். மேலும் ஒரு கருத்துப் பொருள் முடிவுக்கு வரும்போது, அது அடுத்த கருத்துப் பொருளுக்கு வழி வகுக்கும். ஒரு கருத்துப் பொருள் மற்றொரு கருத்துப் பொருளோடு ஒருபோதும் கலக்கப்படுவதில்லை. ஒவ் வொன்றும் அதின் சரியான வரிசையில் கொடுக்கப்படும். இவ்வாறாக இவ்விதமான ஒரு பாட புத்தகத்தில் கணிதத்தைப் பற்றிய முழு பாடமும் கொடுக்கப்படும்.

*23.* சரியாக ஆயத்தம் செய்யப்பட்ட மற்றெல்லா பாட புத்தகங்களிலும் இதே பொதுவான முறை பின் பற்றப்படும். ஆனால் வேதாகமம் அவ்வாறு அமைக்கப் படவில்லை. வேதாகமத்தில் எந்த ஒரு இடத்திலும் ஒரு கருத்துப் பொருளைப் பற்றிய எல்லா காரியங்களையும் நாம் காண்பதில்லை. அவைகள் ஒன்றுக்கு பின் ஒன்றாக வும் படிப்படியாகவும் ஆராயப்படவில்லை. மாறாக “இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக” கொடுக்கப்படுகின்றன *(ஏசா. 28:10)*. தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவி, விசுவாசம், மனந்திரும்புதல், நியாய மாகுதல், மனிதன், மீட்கும் கிரயம், இழந்ததைத் திரும்பக் கொடுத்தல், ஆத்துமா, ஆவி, பாவத்தின் சம்பளம், உயிர்த் தெழுதல் போன்ற ஏதேனுமொரு வேதாகம கருத்துப் பொருளை எடுத்துக் கொள்வோம். அதை பற்றிய காரியங்கள் மற்ற கருத்துப் பொருளோடு கொடுக்கப் பட்டிருப்பதை நாம் காண்போம். அந்த மற்ற கருத்துப் பொருள், இன்னும் மற்ற கருத்துப் பொருள்கள் சம்பந்தமாக, வெவ்வேறான பல இடங்களிலிருப்பதைக் காண்போம். மேலும் அவைகள் பகுதி பகுதியாகக் கொடுக்கப்பட்டிருப்பதையும் காண்போம். தேவன் ஒரு நோக்கத்துடனே அவைகளை இவ்வாறு அமைத்திருக் கிறார். அது என்னவென்றால், அவருடைய ரகசியங் களைப் பெருமையுள்ளவர்களுக்கும், அகந்தையுள்ளவர் களுக்கும், சுயத்தில் திருப்தி அடைபவர்களுக்கும், சுய கருத்துகளை மதிப்பவர்களுக்கும் “ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும்” மறைத்து, “பாலகருக்கு” வெளிப் படுத்துவது என்பதாகும் *(மத்.11:25)*. தேவன் நியமித்த வழியில் அவரிடமிருந்து கற்றுக் கொள்வதற்குப் பணிவு நயமும், மனத்தாழ்மையும், விருப்பமும் உள்ளவர்களுக் குத் தேவன் தமது ரகசியங்களை வெளிப்படுத்துவார். அவர்களுடைய போதனைக்காகத் தேவன் நியமித்த சத்திய போதகர்களுடைய உதவியோடு, அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதே தேவன் நியமித்த வழி யாகும்.

*24.* வேதாகமத்தை ஆராய்கிற பல வகுப்புகள் சுயத்தில் அதிக நம்பிக்கையுடையவர்களாகத், தேவன் ஏற்பாடு செய்திருக்கிற சத்திய ஊழியக்காரர்களை அசட்டை செய்கிறார்கள். அவர்கள் வேதாகமத்தை ஒரு பாட புத்தகமாக உபயோகித்து, தாங்களே அதிலிருந்து சத்தியத்தைப் பெற்றுக் கொள்ள அதை ஆராய நாடு கிறார்கள். வேதாகம புத்தகங்களை அடுத்தடுத்ததாக எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு வசனமாக, ஒரு அதிகாரத் திற்கு அடுத்து மற்றொரு அதிகாரத்தை ஆராய்கிறார்கள். அதினால் அவர்கள் மிக குறைவாகவே புரிந்து கொண்டு அதிக குழப்பத்தையும் ஏமாற்றத்தையும் அடைகிறார்கள். பல நேரங்களில், பல வசனங்களின் அர்த்தம் சம்பந்தமாக, அந்த வகுப்புகளில் எத்தனை பேர் இருக்கிறார்களோ, அத்தனை கருத்துகளைக் கொடுக்கிறார்கள். வேதாகமம் ஒரு பாட புத்தகமல்லவென்றும், அங்கே கொஞ்சமாக இங்கே கொஞ்சமாக, முன் பின் இணையற்ற, புரிந்து கொள்வதற்குக் கடினமான பாடங்களையுடைய ஒரு புத்தகமென்றும் இது நமக்குக் காண்பிக்கிறது. அது போலவே சுயத்தில் அதிக நம்பிக்கையுடைய தனிநபர் களும் கூட, தேவனுடைய ஊழியக்காரர்களை அசட்டைச் செய்து, வேதாகமத்திலிருந்து சத்தியத்தைப் பெற்றுக் கொள்ள தாங்களே அதை ஆராய முயலும்போது, பொதுவாகத் தப்பறை என்னும் தீப்பொறிகளைத் தூண்டி விட்டு அவைகளின் வெளிச்சத்தில் நடப்பார்கள். ஆகை யால் அவர்கள் “வேதனையில் கிடப்பார்கள்” *(ஏசா.50:11)*. விசுவாச யுகத்தில், தேவன் விசுவாசமில்லாத கீழ்ப்படி யாத வகுப்பார்களிடம், யெஷுஆவின் மூலம் உவமை களிலும் மறைபொருள்களிலும் பேசுவார். ஏனென்றால் அவர்களுக்கு அருளப்படவில்லை … அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறார்கள் *(மத். 13:10-16)*.

*25.* உலகத்தின் ஆயிர வருட நியாயத்தீர்ப்பின் நாளில், புத்தகங்கள் திறக்கப்பட்டு, சத்தியம் எல்லோருக்கும் வெளிப்படுத்தப்படும் *(வெளி. 20:12; 1 தீமோ. 2:4; ஏசா. 11:9; எரே. 31:34).* ஆனால் இப்போது தேவன் அவருடைய இரக்கத்தினாலே உலகத்தாருக்குச் சத்தியத்தைப் பற்றிய அறிவை அளிக்காதிருக்கிறார். ஏனென்றால் அவ்வித அறிவு அவர்களுக்கு அதிக பொறுப்பை கொண்டு வரும். ஆகையால் அவர்களுடைய நியாயத் தீர்ப்புக்காக அவர் நியமித்த நாள் வரும் வரை தேவன் அந்த அறிவை அவர்களுக்கு மறைத்து வைத்திருக்கிறார் *(யோவா. 12:47, 48; அப். 17:31).* இக்காலத்தில் விசுவாச வகுப்பார் மட்டுமே பரீட்சிக்கப்படுகிறார்கள் *(1 பேது. 4:17; 1:7).*

*26.* வேதாகமத்தை ஒரு பாட புத்தகமாகக் கருதி ஆராய்வதென்பது, தேவ ஜனங்களின் மத்தியில் பல முரண்பாடான கருத்துகளையும், அதிக குழப்பத்தையும், பல தப்பறைகளையும் விளைவித்திருக்கிறது. ஆகையால் அவ்வித ஆராய்வை நாம் தவிர்க்க வேண்டும். சிலர் இதைக் கருத்தில் கொண்டு, வேதாகமத்தைப் படிப்பதையே முற்றிலும் விட்டுவிட்டு அதை ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது என்று எண்ணி மனமுறிவடைகிறார்கள். ஆனால் இது மற்றொரு மித மிஞ்சிய எல்லைக்குச் செல்வதாகும். ஏனென்றால் தேவ வார்த்தையைப் படிக்க வேண்டுமென்று வேதாகமமே நமக்குக் கட்டளையிடுகிறது; வேதாகமம் அதை அங்கீகரிக்கிறது *(யோவா. 5:39; உபா. 29:29; 31:10-13; நெகே. 8:7, 8; சங். 1:2; 119:96-100, 103, 105, 140; 147:19; ஏசா. 8:20; 30:21; எரே. 15:16; எசே. 3:10; லூக். 11:28; அப். 8:28, 30; ரோம. 15:4; 2 தீமோ. 3:15-17; 2 பேது 3:2; வெளி. 1:3).*

## வேதாகமத்தைப் படிப்பதற்குரிய சரியான முறை

*27.* வேதாகமத்தைப் படிப்பதற்குரிய சரியான முறை என்பது, அதை ஒரு பாட புத்தகமாக உபயோகிக்காமல், வெவ்வேறு இடங்களில் அநேக பாடங்களைக் கொண்ட ஒரு புத்தகமாகக் கருதி, வேதாகம கருத்துகளை ஆராய்வதென்பதாகும். மேலும் அதைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு உதவும்படி தேவன் அவருடைய ஜனங்களுக்காக நியமித்த சத்திய போதகர்களை விசேஷமாக நாட வேண்டும். இது அப்.17:11-ம் வசனத்தில் அங்கீகரிக்கப்படுகிற முறையாகும் *(ஏசா. 8:20; 1 தெச. 5:21; 1 யோவா. 4:1-3-ம் வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).* பவுல் அப்போஸ்தலர் போதித்த காரியங்களுக்கு பெரோயா பட்டணத்தார் "மனோவாஞ்சையாய்" செவிசாய்த்து, அவர் அவர்களுக்குச் சொன்ன காரியங்கள் உண்மையானவைகளாக என்று அவர்கள் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்ததால் அவர்கள் தெசலோனிக்கேயாவிலுள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாகப் பாராட்டப்பட்டார்கள்.

*28.* இவ்வாறாகத் தேவன் அங்கீகரிக்கிற வேதாகம ஆராய்வு முறையை இங்கே நாம் காண்கிறோம். அதில் அடங்கியுள்ள காரியங்களாவன: *(1)* தேவன் நியமித்த சத்திய போதகர்களின் மூலம் கர்த்தராகிய யெஷுஆ சத்தியத்தைக் கொடுப்பார், தேவ வார்த்தையை விளக்குவார், அந்தந்த காலத்திற்குப் புரிந்துகொள்ள வேண்டிய சத்திய செய்தியைக் கொடுப்பார்; *(2)* அதைக் கேட்பவர்கள் ஆயத்தமுள்ள மனதுடன் அவர் சொல்கிற காரியங்களை நன்றாகக் கவனிக்க வேண்டும், மற்றும் *(3)* இந்த போதனைகள் வேதாகமத்திலிருந்து வருகின்றனவாவென்றும், வேதாகமத்தோடு முற்றிலும் இணக்கமாக இருக்கின்றனவாவென்றும் காண்பதற்கு அனுதினமும் வேத வாக்கியங்களை ஆராய வேண்டும். இவ்வாறாக ஒவ்வொருவனும் "தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாக" இருக்க வேண்டும். மேலும் "உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் (பயபக்தியோடும்) உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" *(ரோம. 14:5; 1 பேது. 3:15).*

*29.* இது ஏன் வேதாகமத்தை படிப்பதற்குரிய சரியான முறையாயிருக்கிறது? ஏனென்றால் தேவ வார்த்தையை உண்மையாக விளக்கக் கூடிய ஒரே ஒருவராகிய கர்த்தராகிய யெஷுஆ, புதிய ஏற்பாட்டின் காலங்களில் காலத்திற்குரிய சத்தியத்தை அவருடைய விசேஷித்த சத்திய தூதர்களின் மூலம் கொடுப்பார். பழைய ஏற்பாட்டின் காலங்களில் தேவன் "தீர்க்கதரிசிகள் மூலமாய்" திருவுளம் பற்றினதற்கு இது ஒத்திருக்கிறது *(எபி. 1:1, 2).* ஆகையால் தேவ வார்த்தையைப் பற்றிய சரியான புரிந்துகொள்ளுதலை நாடுகிற ஒருவன் செய்ய வேண்டிய முதல் காரியம் என்னவென்றால், நேரடியாகவோ மறைமுகமாகவோ, அவன் தேவனுடைய விசேஷித்த சத்திய தூதர்களோடு தொடர்புக்குள் வர வேண்டுமென்பதாகும். இது அறிந்தோ அல்லது அறியாமலோ செய்யப்படக்கூடும். நாம் அறியாமலே அது நடக்கும்போது இவ்வாறு நிகழுகிறது: உண்மையான இருதயமுடைய ஒருவன் கர்த்தராகிய யெஷுஆவின் விசேஷித்த சத்திய தூதர்களோடு நேரடியாகத் தொடர்புக்குள் வரும்படிக்கோ அல்லது சத்திய எழுத்துகளின் மூலம் அவர்களோடு தொடர்புக்குள் வரும்படிக்கோ கர்த்தர் அவர்களுடைய காரியங்களைக் கையாண்டு மாற்றி அமைப்பார். இவ்வாறாக, மனத்தாழ்மையும், பணிவு நயமும், சத்தியத்தின் மேல் பசிதாகமுள்ள ஒருவனுக்கு ஒரு சத்திய எழுத்தின் மூலமோ (புத்தகம், சிறு புத்தகம், பத்திரிக்கை, கைப்பிரதி போன்றவைகள்) அல்லது ஒரு சத்திய ஊழியக்காரரின் நேரடியான ஊழியத்தின் மூலமோ சத்திய செய்தி வரும்.

*30.* கர்த்தர் "புத்தகத்தைக் திறந்து, அதின் முத்திரைகளை உடைத்து" *(வெளி. 5:2,5)* அவருடைய ஜனங்களில் ஒவ்வொரு தனி நபருக்கும் நேரடியாகச் சத்தியத்தைக் கொடுப்பதில்லை என்று பல வேத வசனங்கள் காண்பிக்கின்றன. அவருடைய சரீர அங்கத்தினர்கள் ஒரு சீரான மற்றும் திறமையான அமைப்பில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தார்கள். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? *(1கொரி. 12:29)* நிச்சயமாக இல்லை. தேவன் "இப்படி சரீரத்தை அமைத்திருக்கிறார்". ஏனென்றால் "சரீரம் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாக இருக்கிறது". மேலும் "இவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே?" "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" *(1 கொரி. 12:24, 14, 19, 18).*

*31.* இவ்வாறாகச் சுவிசேஷ யுகம் முழுவதும் கர்த்தராகிய யெஷுஆ உருவகமாக "ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவி கொண்டிருக்கிறார்". இந்த ஏழு பொன் குத்துவிளக்குகள் சபையின் ஏழு கால கட்டங்களைக் குறிக்கின்றன. அது எபேசு அல்லது யூத யுக அறுவடை கால கட்டத்தோடு தொடங்கி சபையின் லவோதிக்கேயா கால கட்டத்தோடு முடிவுக்கு வரும். லவோதிக்கேயா கால கட்டமானது கர்த்தருடைய இரண்

*டாம் வருகையின் காலமாகும் (வெளி. 2:1-29; 3:1-22).* அவர் "தமது வலது கரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்தி கொண்டிருப்பவராகச்" சித்தரிக்கப்படுகிறார். அந்த ஏழு நட்சத்திரங்கள் "ஏழு சபைகளின் தூதர்களைக்" குறிக் கின்றன என்று கர்த்தர் தாமே நமக்கு விளக்குகிறார் *(வெளி. 1:16,20).*

*32.* இந்த நட்சத்திரங்கள் அல்லது வெளிச்சத்தை தூக்கிச்செல்பவர்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நபருக்கு மேலானவர்கள் இருந்தார்கள். இவ்வாறாகச் சபையின் எபேசு கால கட்டத்தின் நட்சத்திரத்தில் அல்லது தூத ரில் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் இருந்தார்கள் (இந்த கால கட்டம் கி.பி. 69-ம் வருடத்துடன் முடிவுக்கு வந்தது). சபையின் மறுமலர்ச்சியின் காலமாகிய பிலதெல்பியா கால கட்டத்தின் நட்சத்திரத்தில் அல்லது தூதரில் பல விசேஷித்த ஊழியக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் மூலம் கர்த்தராகிய யெஷுஆ மறுமலர்ச்சிக்குரிய முக்கிய மான சத்தியங்களைக் கொடுத்தார்.

*33.* பின்வரும் காரியத்தைக் கவனியுங்கள்: சபை யின் ஏழு கால கட்டங்கள் ஒவ்வொன்றும் சம்பந்தமாக "ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று யெஷுஆ கூறினார் *(வெளி. 2:7, 11, 17, 29; 3:6, 13, 22).* ஆனால் எந்த ஒரு சபையின் காலத் திலும் கூட, காலத்திற்குரிய சத்தியம் கொடுக்கப்படு வதற்கு ஏற்ற வேளை வந்தபோது அந்த வெளிப்பாடு ஆரம்பத்திலே அந்த சபையின் அங்கத்தினர்களுக்கு நேரடியாகக் கொடுக்கப்படவில்லை. அது எப்போதுமே அந்தந்த சபைக்குரிய "தூதருக்கு" அல்லது "நட்சத்திரத் திற்கு" கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு சபையின் காரியத் திலும் "சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது..." என்று குறிப்பாகச் சொல்லப்பட்டது *(வெளி. 2:1, 8, 12, 18; 3:1, 7, 14).*

*34.* நாம் எப்போதுமே கர்த்தரை நோக்கி பார்க்கும்படிக்கும், ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷ புத்தகம் வரையுள்ள தேவ வார்த்தையின் அடிப் படையுள்ள சத்திய போதனைகளை மட்டுமே ஏற்றுக் கொள்வதைக் குறித்து மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர் களாய் இருக்க வேண்டும். மேலும் கர்த்தருடைய விசே ஷித்த ஊழியக்காரர்களின் மூலமும், சத்திய போதனை களுக்கு இணக்கமாக இருப்பவர்களின் மூலமும் கொடுக் கப்பட்ட போதனைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும். "கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையா யிருங்கள்" என்றும் நம்முடைய காலத்திற்குரிய "பரிசேயர் (பாரம்பரிய போதனைகளைக் கண்டிப்பாகப் பற்றிக் கொண்டு, சுயத்தை நியாயப்படுத்துபவர்கள்) சதுசேயர் (உயிர்த்தெழுதலை மற்றும் மற்ற வேதாகம கோட்பாடு களை மறுப்பவர்கள்) என்பவர்களின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்றும் நம்முடைய கர்த்தர் நமக்குச் சொல்கிறார் *(மத். 7:15;16:6).* "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" *(கொலோ. 2:8).*

*35.* ஏதேனுமொரு மத ரீதியான கருத்தைப் பற்றிய சத்தியத்தை அல்லது தப்பறையை எளிதாகக் கண்டு கொள்வதற்குரிய ஏழு விதிகளை அல்லது பிரமாணங்களை மனதில் கொண்டால், தப்பறையையும், தப்பறையைப் போதிப்பவர்களின் சொந்த கருத்துகளை யும் தவிர்க்க அது நமக்கு உதவும். ஒரு போதனை உண்மை யாயிருப்பதற்கு, *(1)* தன்னில் தானே, *(2)* ஒவ்வொரு வேத வசனத்துடனும், *(3)* ஒவ்வொரு வேதாகம கோட்பாட்டு டனும், *(4)* தேவனுடைய குணாம்சத்துடனும், *(5)* மீட்கும் பலியுடனும், *(6)* உண்மை நிகழ்வான சம்பவங்களுடனும், *(7)* யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டின் நோக்கத் துடனும் இணக்கமாக இருக்க வேண்டும். உண்மையும் நேர்மையுமுள்ள ஒரு கிறிஸ்தவன் அவனுக்கு முன் வைக்கப்படுகிற பல தப்பறைகளை இந்த ஏழு விதிகளின் உதவியோடு எளிதாகக் கண்டுணரக் கூடும். அதின் மூலம் அந்த தப்பறைகளுக்காக விலையேறப்பெற்ற நேரத்தைச் செலவழிக்காமல், அவைகளைப் புறம்பே தள்ளக் கூடும்.

*36.* தேவ வார்த்தையையும், சபை மற்றும் மனுகுலத்தின் இரட்சிப்புக்காக அவர் திட்டமிட்ட அதிசயமான ஏற்பாட்டையும் புரிந்துகொள்வதற்குத் தேவையான அடிப்படை உதவியாக "யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு" என்ற புத்தகத்தை நாங்கள் பரிந்துரைக் கிறோம். அது பெரும் எண்ணிக்கையில் விற்பனையான ஒரு புத்தகமாகும். ஒரு கோடிக்கும் மேலான எண்ணிக் கையில் விற்பனையாகி இருக்கிறது. அது மிக எளிமை யான மொழியில், எந்த மதப்பிரிவின் கண்ணோட்டத் தையும் எடுத்துக் கொள்ளாமல் எழுதப்பட்டிருக்கிறது. வேதாகம போதனைகள் மட்டுமே அதின் அடிப்படை யாக இருக்கின்றன. வேதாகம இரகசியங்களைத் திறக் கும் உண்மையான வேதாகம திறவுகோலாக இருக்கிறது. மேலும் புரிந்துகொள்ளுதலோடு "சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிப்பதற்கு" ஒருவனுக்குத் திராணி அளிக்கும்.

## பரிசுத்த வேதாகமம்

பிள்ளைகளுக்கு ஒரு தரம் தேவைப்படும் போதும்,
இளைஞர்களுக்கு வழிகாட்டும் வெளிச்சம்
தேவைப்படும் போதும்,
ஆறுதலுக்காகத் துக்கம் பெருமூச்சு விடும் போதும்,
பெலவீனம் பெலத்தை ஆவலாய் வாஞ்சிக்கும் போதும்,
பரிசுத்த வேதாகமத்தை கொண்டு வாருங்கள்
இதோ! பரிசுத்த வேதாகமம்! உறுதியாய் நிலை நிற்கிறது!
வாழ்க்கையின் எல்லா பிரச்சனைகளையும் தீர்த்து,
அதின் கோரிக்கைகளை எல்லாம் பூர்த்தி செய்கிறது.

பொய்யான வாதம் அதை மறைத்தாலும்,
இதோ! பரிசுத்த வேதாகமம்! உறுதியாய் நிலை நிற்கிறது!
பரிசேயர்கள் அதைப் பயபக்தியற்று கையாண்டாலும்,
அதின் சத்தியம் தொடர்ந்து விரிவடைந்து
கொண்டிருக்கிறது.
அது உலகத்தை.நறுமணத்தினால் நிரப்புகிறது,
அதின் இனிமை ஒருபோதும் திகட்டச் செய்யாது;
அது நம்மைப் பரலோகத்தை நோக்கி பார்க்கச் செய்கிறது,
மானிட சந்தோஷங்களை உயர்த்துகிறது.

வெறுக்கப்பட்டு கிழித்து போடப்பட்டிருக்கிறது,
தேவ நம்பிக்கையற்றவர்களால்
புறக்கணிக்கப்பட்டிருக்கிறது,
அநேகர் அதின் போதனைகளைப் புரட்டுகிறார்கள்,
குறை கூறுபவர்கள் பெருமையோடு பரியாசம்
பண்ணுகிறார்கள் –
இவர்களெல்லோரும் அதை உதாசீனப்படுத்துகிறார்கள்,
இந்த நாட்டிலும் மற்ற நாடுகளிலும் இதை நாம்
காண்கிறோம்.
பல அரச வம்சங்கள் வீழ்ந்திருந்தாலும்,
வேதாகமம் தொடர்ந்து நிலை நிற்கிறது.

அது தேவனுடைய வெளிப்பாடு,

*இதோ! பரிசுத்த வேதாகமம்! உறுதியாய் நிலை நிற்கிறது!*
*அதின் வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவைகள்,*
*அதின் கட்டளைகள் பாரமானவைகள் அல்ல.*
*மனிதனுக்கு அவனுடைய இரட்சகரையும்,*
*அவன் ஆத்தும நேசரையும் சுட்டிக் காட்டுகிறது,*
*இரட்சிப்பு அதின் கடவுச்சொல்,*
*நித்திய காலம் அதின் குறிக்கோள்.*

★★★★★★★★★★★★★★★★★★★★★★



# அக்கினித்தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய்

***ரோம. 12:20***
***BSQB p.207***

ரோம. 12:20-ம் வசனத்தில், "உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்" என்பதின் அர்த்தமென்ன?

1. மல். 3:2; 4:1; எபி. 12:29; புல. 4:11; செப். 3:8, 9; மத். 3:10-12; லூக். 12:49; 1 கொரி. 3:12-15; யாக். 3:6; 2 பேது. 3:7, 12; யூதா 7; வெளி. 17:16; 20:9 முதலிய வசனங்களில் அக்கினி என்ற வார்த்தை அழிவின் ஒரு உருவகமாக உபயோகிக்கப்பட்டதைப் போல், இவ்வசனத்திலும் அதே கருத்தில் உபயோகிக்கப்படுகிறது. இவ்வசனத்தின் சூழ்நிலை அமைப்பு, இதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. ஒரு கிறிஸ்தவனைத் துன்பப்படுத்துகிறவனை அவன் ஆசீர்வதிக்க வேண்டும் (ரோம. 12:14); அவன் மற்றவர்களுடன் ஒத்துணர்வுக் கொள்ள வேண்டும் (வச.15). மனத்தாழ்மையுள்ளவனாக இருக்க வேண்டும் (வச.16). தீமைக்குத் தீமை செய்கிறவனாக இல்லாமல், நேர்மையுள்ளவனாக இருக்க வேண்டும் (வச.17). நல்ல கோட்பாடுகளுக்கு இணக்கமாக அவன் மற்றவர்களோடு சமாதானமாக வாழ வேண்டும் (வச.18). பழி வாங்குகிறவனாக இல்லாமல், தன் கொள்கைகளை விட்டுவிடாமல், அவனால் இயன்றவரை தன் சத்துருக்களுக்கும் அவர்களுடைய கோபத்திற்கும் இடங்கொடுக்க வேண்டும் (வச.19). அவனுடைய இருதயத்திலும் மனதிலும் தீமை ஆளுகை செய்ய இடங்கொடாமல், தீமையையும், தீமை செய்பவர்களையும் நன்மையினால் வெல்ல வேண்டும் (21).

2. இவ்வாறாக உங்கள் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனம் கொடுப்பதின் மூலமும், அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானம் கொடுப்பதின் மூலமும், அல்லது வேறு வகையில் அவனிடம் கனிவாகச் செயல்படுவதின் மூலமும் நீங்கள் தீமைக்குப் பதிலாக நன்மையைச் செய்தால், உங்கள் நடத்தையைக் கண்டு, அவன் தன் நடத்தையைக் குறித்து வெட்கமடையும்படி செய்வீர்கள். நீங்கள் அவனிடம் நல்லெண்ணம் கொண்டிருக்கிறீர்கள் என்றும், நீங்கள் அவனுடைய சத்துருவாக இல்லாமல் அவனுடைய சிநேகிதனாயிருக்கிறீர்கள் என்றும் அவன் புரிந்து கொள்வான். "இப்படி செய்வதினால்" நீங்கள் உருவகமாக "அக்கினித்தழலை அவன் தலையின்மேல்" குவிப்பீர்கள். அதாவது அவன் கொண்டிருக்கிற பகைமையை எரித்துப் போடுவீர்கள் (அழித்துப் போடுவீர்கள்). நீங்கள் உண்மையில் அவனுடைய சத்துரு அல்ல. நீங்கள் அவனுடைய சத்துரு என்று அவன் எண்ணுகிறான். உங்களுடைய கனிவான செய்கைகள் அவனைச் சரியாகச் சிந்திக்க வைக்கும். உங்கள் சத்துருவை சிநேகிதனாக மாற்றக்கூடும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

**வழிகளிலே நின்று,**
**பூர்வ பாதைகள் எவையென்று**
**கேட்டு விசாரித்து,**
**நல்ல வழி எங்கே**
**என்று பார்த்து,**
**அதிலே நடவுங்கள்;**
**அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு**
**இளைப்பாறுதல் கிடைக்கும்**

***எரே. 6:16***

***உங்கள் கவனத்திற்கு***
சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

**புது உடன்படிக்கை**
*Monthly newsletter published by*
*the brethren of the*
*Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*